உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

புலிப்பாணி மஹாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிச்செய்த

வைத்தியம்-நூ.

12
1-76

இஃது,

சிதம்பரம்

கருணாநந்தசுவாமிகளால்

பரிசோதித்துச்

சிந்தாத்திரிப்பேட்டை,


நாராயணசாமிமுதலியாரவர்களால்

தமது

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

கஅஎஙிஙூ- நஎம்பர்மீ.



வ

கடவுள் துணை.

புலிப்பாணிமஹாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிச்செய்த

வைத்தியம்-நூ.



காப்பு.

எண்சீராசிரியவிருத்தம்.

அண்டரண்டமாகிநின்ற வரனேகாப்பு ஆனந்தமாகிநின்றஉ மையாட்காப்பு -குண்டமெனுங்குண்டலியின் குறியேகாப்பு - குமரகுருவேள்முருகர்பாதங்காப்பு - புண்டரிகமானதிருமாலுங்காப்பு-புகழ்*பிரமமுதற்*குலிசனேவர்காப்பு - சண்டமெனுமாருதம்போல்வைத்தியத்தில்சாற்றுகிறேன்போகருடபாதங்காப்பே.

* பிரமன் பிரமா- * குலிசன்-வைரவன்

நூல்.

(சுரமாத்திரை)

காப்பாகசுரக்குளிகைசொல்லக்கேளு கருவானகௌரியதுவி ராகனேந்து- சேப்பாகமிளகதுவுமதிலேபாதி திறமானஉழுந்தது வுமிதுநேரப்பா- வேப்பாகவிருசரக்குங்கல்வத்திட்டுவிதமாகளருக்கம்பால் தன்னுலாட்டி- பாப்பாக கௌரிக்கு கவசங்கட்டிப்பாங்காக*ரவிமுகத்தில் வைத்திடாமே (உ)

*ரவியில் வெய்யிலில்

வைத்தவுட னெடுத்துவந்து துணிமேற்சுத்தி வகையாகவெள்ளாவிதன்னில்வைத்து- கைத்தவுடனெடுத்துப்பின்கவசம்வாங்கினமாக* அமுரியிலுல் கழுவிப்போட்டு - செத்தவுடன்ரவிதனிலே*கடிகைவைத்துசெயலானகல்வத்திலிட்டுநீயும்- உய்த்தவுடன் பாச்சானேவரட்டிதண்ணீருத்தமனே நாற்சாமமரைத்துத்தீரே.

*அமுரி-மூத்திரம்*பாச்சான்- கள்ளி*கடிகை-நாழிகை.

தீரேநீகுளிகையது சிறுபயறுபோலே திறமாகஉண்டைசெய்துநிழலுலர்த்தி-சேரே நீ சிமிழ்தனிலே யடைத்துக் கொண்டு செகத்திலுள்ளமனிதருக்குசுரத்துக்கெல்லாம் - பாரேநீசுக்குடையகியாழந்தன்னில் பண்பாகக்குளிகை யொன்றுகொடுத்துப்பாரு-வீரேநீமூன்று பகல்கொடுக்கும்போது விதமானநால்முறையின்சுரங்கள்போமே (ச)

போமேநீபத்தியமாயறுநாள்காரு பொங்கமுடன்வெந்நீரு
ஞ்சாதமாகும் - ஆமேநீமற்றொன்றுமாகாதப்பாஅடவாகவழாதா
ள்சலத்தைவாரு - நாமேநீமிளகுடனேசிறுகீரைவேரும் நல்மாகக்
கியாழம்வைத்துக்கொள்ளச்சொல்லு-போமேநீபத்தியந்தான்மு
றிக்கச்சொல்லிப் புனிதமுடன்மற்றுநாளெல்லாஞ்சேரே (ரு)

சன்னிக்கு மேல்பூசத்தயிலம்.

சேரேநீசன்னிக்குத்தயிலமொன்று செப்புகிறேன்புலிப்பா
ணி விளக்கமாக - வீரேநீவேப்பெண்ணெய்ப் படிதானொன்று வி
தமான *கார்த்திகையின் *கிழங்குதண்ணீர் - பாரேநீபடிதண்ணீர
ளந்துவாருபாங்கானகருநாபி விராகளொன்று-கூரே நீவசம்பதுவு
ம் விராகனேந்துகொடிதான வெள்ளுள்ளிவிராகனஞ்சே (சு)

*கார்த்திகைக்கிழங்கு-கலப்பைக்கிழங்கு *கிழங்குதண்ணீர்-கிழங்கு
* வெள்ளுள்ளி வெள்ளைப்பூண்டு, [ச்சார்

அஞ்சான *காயமதுவிராகளொன்று அப்பனேஓமமதுவிரா
கனேந்து - தஞ்சானசதகுப்பைவிராகனேந்து சாதிக்காய் * வெந்
தோன்றிவிராகன்பத்து-மஞ்சானஇதையெல்லாங்கிழங்குநீரில்மை
ந்தனேமைபோலே யரைத்துப்போடு - தஞ்சான எண்ணெயிலே
கலக்கிக்கொண்டு தயவாகக்குகுபதந்தன்னில்வாங்கே (எ)

* காயம்-பெருங்காயம்-வெந்தோன்றி-ஆகாசகருடன்கிழங்கு,

வாங்கியெண்ணெய்மேல்பூசச் சன்னிபோகும் வகையான
குடைச்சல் முதல்வாதம்போகும் - பாங்கியேஉள்ளுக்குக்கொடு
க்கொணது பாங்காகமஞ்சலிட்டுச் சாணமிட்டு- தாங்கியேநீரிட்
டுக்கழுவிப்போடு தயவாக இந்தஎண்ணெய் யுறுதிமெத்த - ஏங்கி
யேயலையாதே யப்பாசொன்னே னிதமாகவைத்தியந்தா னின்ன
ங்கேளே (அ)

சூதகவலிக்கு-உப்பு.

கேளேநீசூதகத்தின் வலிதான்போக கெடியாகசொல்லுகி
றேனன்றுய்க் கேளுவீளே நீ போகாமலுப்பைவாங்கி விதமான
கரந்தைபுடசாற்று லாட்டி-நாளேநீகாயவிட்டுப் புடத்தில்போ
ட்டுநாயகனே யிம்முறையா யைந்துதீரு - பாளேநீபோகாமலெ
டுத்துக்கொண்டுபண்பான * ஆண்செருப்படையின்சாரே (கூ)

* கரந்தை கொட்டக்கரந்தை
* ஆண்செருப்படை சிறுசெருப்படை

சாற்ருலேயைந்துபுடம் போட்டாயானுற் சார்வாகச்செங் கனீறுபோலேயாகும்- பார்த்தாலேகுடோரியது இதற்கொவ்வா துபண்பானசூதகத்தின் வலிமேயகண்டாய், மாற்ருலே எலுமிச்ச ம்பழச்சாற்ருலே! மைந்தனேயகஸ்தியஞர்குழம்பைக்கேளு- ஏற் ருலே பணவெடைதான் சாற்றிற்சேர்த்து இதமாக உள்ளுக்குக் கொடுத்திடாயே. (ம)

கொடுத்திடவேபேதியது அதிகங்கண்டால் குணமாக வசம் பதினைகரிக்கிக்கொண்டு- அடுத்திடவோர் படிசலந்தான் கூடவார் த்து அடவாகஎட்டொன்ருய்க்குறுக்கிக்கொண்டு - கடுத்துடனே கொடுத்துவிடுபேதிநிற்குங் கருவாகப்பதீதியமாய்க்காருகாரு- ச டுத்தமில்லேபச்சரிசிபயற்றிலேடி சார்வாகப்பத்தியந்தானுப்பா காதே. (மக)

ஆகாதுமற்ருன்றுமாகாதப்பா அடவாகமற்ருநாள் மருந் தைக்கேளு- சாகாதவெள்ளுள்ளித்தயிலம்வாங்கி சாதகமாய்த்து ட்டெடைதா ளொன்றில்வார்த்து - நோகாதுமூன்சொன்ன வுப் பைமைந்தா நோய்தீரவிராகளென்று பொடித்துப்போடு-போ காத சூதகமாம்வலிதான்தீர புகட்டிவிடு தயிலமதை கொடுத்தி டாயே. (மஉ)

கொடுத்திடுவாயிந்தமுறை நாண்மூன்றப்பா குணமாகபத் தியமாய்க்காக்கச்சொல்லு- அடுத்திடுவாய் பச்சரிசி பருப்பிலே டு அடவாகபுனற்பாகமாகக்காச்சி சடுத்தமில்லேகொடுத்துவிடுஉப் பாகாது சார்பாகவைந்தாளுள்தலேயைமூழ்கு - நடுத்திடுவாயுப் பதுவும்வறுத்துக்கூட்டு நலமானமற்ருநாளெல்லாமாமே (மரு)

பெரும்பாடுக்குமருந்து,

ஆமேநீபெரும்பாடுவந்தபேர்க்குஅடவாகநாவல்பட்டையெ ருமைமோரில்-தாமே நீ துவைத்திடித்துப் பிழிந்துக்கொண்டுத யவாகசந்தனந்தான்விராகனைந்து நாமேதான் புளித்தமோர்தனி ற்கலக்கிநாயகனேகொடுத்துவிடுநாண்மூன்றப்பா - மீமேநீபெ ரும்பாடுஎங்கேபோச்சுவிதமாகபத்தியந்தா னில்லேத்தானே (மச)

குன்மம் ஆறுக்கும் உப்பு.

தானேநீகுன்மம்வகையாறுந்தீர தயவாகவுப்பொன்று சொல் லக்கேளு- மானேநீஉப்பதுவும்படிதாளென்று மைந்தனேயெ ருமைமோர்படிதாளென்று - வானேநீவரிக்குமட்டிச்சாருநாழி வகையானஇந்துப்பு வெடியுப்போடு - தேனேநீசவுட்டுப்புவகை யலும்புதெளிவாகவகைவகைக்கு விராகளென்றே (மஙி)

ஒன்ருகஇதையெடுத்துப் பாண்டத்திட்டு உத்தமனே மோரு டனேசாறும்விட்டு - பன்ருகஅக்கினியி லெரிக்கும்போது பத

ராமலுப்பது சரிக்கரைபோலாகுங்- குன்முகப்பாண்டத்தி லெடு த்துலர்த்தி குணமாகவுதையாதி*அன்னநீரில், நன்முகவிராகனை டையுப்புரண்டுநலமாகத்தான்போட்டுக்கொடுத்திடாயே. (யசு)

* அன்னநீர் பழந்தண்ணீர்,

கொடுத்திடுவாய்மண்டலந்தானிந்தவிதந் குணமாக அவரவ ர்க்குநாள்தான்தள்ளு- தொடுத்திடுவாய்வாயுவென்ற கட்டிப்போ குந் தொந்திப்புச்சோகைபோம் பொருமற்றீரும், படுத்திடுவா யீகவிசையொடுகிரிச்சினங்கட் பாழானகெண்டைமுதற் பறந்து போகுங்-கடுத்திடுவாய் அகுவையென்ற கட்டிப்போகுங் கடலா னைஉப்புடையதிறந்தான்காணே. (யஎ)

நீரடைப்புக்கு வாழைக்கிழங்கின்நீர்,

காணென்ற நீரடைப்புக்கண்டபேர்க்கு கனிவாக வாழையு டகிழங்கைத்தோண்டி-ஊணேநீ மற்முநாட்பார்க்கும்போது உ த்தமனேவாழையுள்ளே தண்ணீர்நிற்கும்- வீணேநீபோகாமற் கி ழங்குதண்ணீர் விதமாகஅளைபடிதா னெடுத்துவந்து - பூணேநீ வெடியுப்புவிராகன்ரண்டு போட்டதிலேகொடுக்க நீர்க்கட்டிப் போமே. (யஅ)

மெத்தலைவியாதிக்கெண்ணெய்,

போமேதான் மெத்தலையின் வியாதிதீரபொங்கமுடனெள் ளெண்ணெய்படிதாளென்று- தாமேதான்பசுவின்பால் படிதா ளென்றுதயவாகசம்பஞ்சோற்றின்நீரைவிட்டு- வேமேதா ளுதொ ண்டையிலையில்தானும் விதமாகத்தான்துவைத்துச்சாறு நாழி- வாமேதான்மிளகதுவு பலந்தான்ரண்டு வளமாகத்தானுடைத்து ப்போட்டிடாயே (யக)

போட்டதொருமிளகதுவு மிதக்கமட்டும் - பொங்கமுடனக்கி னியிலெரிக்கவேண்டும்- நாட்டவேயிறக்கிவைத்துவடித்துக் கொ ண்டுநலமானமிளகதனை வளைத்துக்கூட்டு - ஊட்டவேஉதயாதி துடங்குமுன்னே உத்தமனே தலைமுழுகியழுதுகொள்ளு - கா ட்டவேமண்டையிடி கண்ணுக்குத்து காலமெமுழுகிவரவோடி ப்போமோ (உ)

அண்டவியாதிக்குளெண்ணெய்,

போமப்பாஅண்டத்தின் வியாதிவந்தாற் பெங்கமுடனெண் ணெயொன்றுசொல்லக்கேளு - ஆமப்பா போகருடகடாட்சத் தாலே அடவாகப்புலிப்பாணிமுறையைச்சொல்வேன் - தாமப் பாவிளக்கெண்ணெய்ப்படிதாளென்று தயவானமிளகுதக்காளிச் சாறு- வாமப்பாபடிவொன்றுஅளந்துவாருவளமான வெந்தைவ ந்தான் பலமும்ரண்டே (உக)

ரண்டானவெந்தைவத்தை சும்மாய்ப்போடுநினைவுகள்தான்பிச

காமலெரிப்பாய்நீயே-உண்டான்வெந்தையத்தான் மொருமொ
ருப்பாலுல் உத்தமனேகடுகோடேஉற்றிக்கொள்ளு - பண்டான
யெண்ணெயைத்தான் கொள்ளவென்றுல்பாங்காகப் படியளைக்
கால் கொள்ளச்சொல்லு, திண்டானகற்கமது கரண்டிகொள்ளதி
றமாகமூன்றுநாள் முறையாய்க்கொள்ளே. (உஉ)

கொள்ளவேபத்தியந்தானென்றுமாகா கொடியதோ ராறு
நாட்காருகாரு-தெள்ளவே உப்பாகாபுளியுமாகா தெள்ளிமையா
ய்சாதமன்றிசுவைகளாகா-மெள்ளவேபத்தியம்தா னேழாநாளின்
மேன்மையாய்த்தான்முறித்து சுல்லாங்கொள்ளு - உள்ளவே அ
ண்டமென்றவியாதிபோகும் உத்தமனேநாட்சென்றுல் போகா
தென்னே. (உங)

ஒருதலைநோய்க்கு நசியம்.

போகுமப்பா ஒருதலையின்வியாதிரோகம்பொங்கமுடன்* சமுத்திராப்பழத்தைவாங்கி - ஆகுமப்பாபெருங்காயம் நேராய்ச்சேர்த்து அடவானபெண்முலைப்பா லதனுலாட்டி, எகுமப்பா குளிகைபோல் செய்துக்கொண்டு இதமானபெண்முலைப்பால் தனிலுரைத்து-மேவுகுமப்பாநாசியிலே விட்டபோது விரண்டோடியகன்றுவிடும்வீரந்தானே. (உச)

* சமுத்திராப்பழம் சவுரிப்பழம்.

பீநசத்துக்கு நசியம்.

வீரந்தானின்னமொருவுபாயங்கேளு விதமானமாதளம்பூ* அருக்கன்பூவுங்-காரத்தான் குங்குமப்பூமூன்றும்நேராய் கலவத்தி லாட்டியிதைமுலைப்பால் விட்டு- சோரந்தானில்லாமல்நாசியிலே பிழியச் * சோரியென்ற பீநசந்தானேழுந்திரும் - பாரந்தானில் லையப்பா சூட்சமாகப் பாடினேன்புலிப்பாணி விளங்கத்தானே.

* அருக்கன் எருக்கன். * சோரி இரத்தம்.

காதுவலிக்கு எண்ணெய்.

விளங்கவேகாதிலுற்ற நோய்தனக்கு விதமானமரமஞ்சள் வெள்ளைப்பூண்டு - அளங்கவேசுக்கோடு வலம்புரியின்காயும்அட வானகரியசிரகத்திலேடு - முளங்கவேநண்டிறைச்சி நத்தையோ டு*முசுறுமுட்டை கருங்கோழிமுட்டையோடு - புளங்கவேயிவை யெல்லாம்விராகலென்று புதுமையிலெக்கள்ளிபுனல் முருங்கைச் சாறே. (உசு)

* முசுறுமுட்டை ஒருவிதஎறும்பின்முட்டை.

சாறென்னவகைக்குவகை படிதான்விசம் சார்வானபசுவி னெய்ப்படிதான்காலு - வாறென்னவேப்பெண்ணெய்ப் படிதா

ன்காலு வளமாகவிட்டெரித்துகாதிலூற்றி- பாரென்னபஞ்சுகொ
ண்டிமூடச்சொல்லுபாங்காகஈராறுநாள்தான்வாரு- கூறென்னகா
திலுள்ளவியாதியெல்லாங்குணமாகும்போகருடகடாக்ஷந்தானே

கண்படலந்தீர ரத்நாதிகுளிகை.

தானென்ற கண்ணிலப்பாலந்தீர தயவானமிளகுடனே சுக்
குக்கூட்டி - காணென்றதிப்பிலியுஞ்சங்குக்கூடக் கரிய * மால்தா
ரமுடன்புங்கம்வித்து - வேணென்ற அதிமதுரந்துத்தத்தோடு வி
தமானபிதமேராகணியுங்கூட-பானென்ற மிளகுசிலயு * மேனக்
கொம்பும் பண்பான ஆமையுடவோடுங்கூட்டே. (உஅ)

* மால்தாரம்அரிதாரம் * எனக்கொம்பு பன்றிசிங்கப்பல்

கூட்டப்பா புலிநகமும் வெள்ளியோடு கொடிதானசேவ
லின்நெஞ்செலும்புங்கூட்டு- மூடப்பாஇந்துப்பு இவையெல்லா
ந்தான் மூனையாகஒருடையாய் நிறுத்துக்கொண்டு- ஆட்டப்பா
கல்வத்தில்*நந்திபத்திரிஅடவாகச்சாறுவிட்டுஒருநாளாட்டு- கூட்
டப்பாஅதனுடைய பூச்சாறுதானே-சொல்லடா ஒருநாள்தாரு
ட்டித்தீரே. (உக)

* நந்திபத்திரி நந்தியாவட்டஎலை

தீர்த்தெடுத்துக்கயிறுபோலுருட்டிக்கொண்டு திறமாகநிழ
லுலர்த்திபதனம்பண்ணு- பார்த்தெடுத்துதேனதிலே யுரைத்துப்
போட படருமென்றவகைகளெல்லாம் பறந்துபோகுஞ் - சார்த்
தெடுத்த மூலைப்பாலி லுரைத்துப்போட - சார்வாகவிராறுநாளு
க்குள்ளே- பீர்த்தெடுத்தரத்நாதி குளிகையென்பார் இருவிழியின்
படலமெல்லாம்வாங்குந்தானே. (கூ)

மாலைக்கண்ணுக்குமை.

தானென்றமாலையுட கண்ணுக்கப்பா தயவானசுழல்வண்டு
சுட்டச்சாம்பல் - வேணென்றகல்வத்தில் போட்டுக்கொண்டு வித
மாகஎள்ளெண்ணெய்*நீர்ப்பூண்டுச்சாறும் - பானென்றபருத்தி
யிலைச்சாறுங்கூட்டி பாங்கானவெள்ளுள்ளிமிளகுபத்து - வானெ
ன்றமைப்போல ஆட்டிக்கொண்டு வளமாகஅந்திசந்தி கண்ணிற்
போடே. (கக)

* நீர்ப்பூண்டு நீர்முள்ளி

போடப்பா நாள்மூன்றுபோட்டபோது பொங்கமுடன்
மாலையதகன்றுபோச்சு - விடப்பாவிளக்கெண்ணெய் வாரிதம்
விதமாகஅலைந்து முழுகும்போது - சாடப்பா அருந்தாதி கண்
ணில் தோற்றுஞ் சார்வாகமீப்பார்வை கண்ணிற்காணும் - நாட
ப்பாபோகருட கடாட்சத்தாலே நலமாகப் புலிப்பாணி பாடி
னேனே. (கஉ)

கண்ணில்நீர்வடிதலுக்குலம.

பாடினேன்கண்ணில்நீர்வடிந்துதாலுல் பரிவாகவாப்பூலாயி லேயோர்குத்து-நாடினேன்கருவேலனிலேயோர்குத்து நலமான தான்றிக்காய்மாசிக்காயுஞ்- சூடினேன்கடுக்காயுங்காசுங்கட்டி சுக மாகவகைவகைக்கு விராகலொன்று, கூடினே னிவையெல்லாம் பொடித்துப்போட்டு குணமாகவேகவைத்துபிழிந்திடாயே ()

பிழிந்திடுவாய்கரண்டியிலேவேணமட்டும்புனிதமுடன்அபி னியது விராகன்கால்தான் - செழுந்திடுவாய் * சீனமதுபொரித் துக்கொண்டு செயலானபொரியதுவும்விராகன்கால்தான்- குழிந் திடுவாயடுப்பிலேகாயும்போது கூசாமலாவனையின்குச்சியாலே- சுழிந்திடுவாய்மைப்போலே கடைவாயப்பா சுகமாகக்கண்ணைசு ற்றிவழித்துப்போடே (கூச)

* சீனம் படிகாரம்.

போடுமுன்னே புளியிலையைவேகவைத்துப்பொங்கமுடன் கண்ணையுநீகழுவிப்போட்டு - ஆடுமுன்னே இந்தயிலேவேதுவைத் து அடவாகப்போட்டவுடன்கண்ணீர்நிற்கும்-நாடுமுன்னேசிவப் பெல்லாம்வாங்கிப்போகும்நலமான அழுகண்ணுந்தீரும்பாரு கூ டுமுன்னேஇன்னமொருவைத்தியந்தான் குணமாகச் சொல்லுகி றேன்கேளுகேளே (கூரு)

கண்வலிக்கெல்லாம்.

கேளப்பாகண்ணுவலிவந்தபேர்க்கு கொடியான துளசிபுண் ணுக்கிலையிலேடு-சூளப்பாபுளியினிலேஇந்தமூன்றுஞ் சுகமாகத்த ட்டியதைதுணியில்வைத்து, வீளப்பாஇல்லையடா*கோளங்கட்டி விதமென்னதூளதுவும் விராகன்பத்து- பாளப்பாபழம்புளியை கரைத்துநீயும் பாங்கானகண்ணுக்குப்பிழிந்துபாரே (கூசு)

* கோளங்கட்டிதிரட்சியாய்க்கட்டி மூன்சொன்னமூ வகையிலேகள் பத்துவிராகனெடைகொண்டது.

பாரோநீபொட்டணத்தைப் பிடிக்கச்சொல்லு பண்பாகநா லுதரமொருநாள்வாரு, சேரோநீவார்த்தவுடன் வலிதாநிற்குஞ்சிற ப்பாகநாள்மூன்றுஇந்தபாகம்-ஆரோநீ யைந்துநாள்சொல்லக்கே ளுஆவாரம்பூதலையிட்டு முழுகச்சொல்லு-கூரோநீகண்ணுவலியெங் கேபோச்சு குருவானபோகருட கடாட்சந்தானே, (கூஎ)

தந்தவியாதிக்கெல்லாம்-பொடி,

தானேதான் * தந்தமென்றவியாதிக்கப்பா தயவானஅரப் பொடியும்பலந்தாலொன்று, வேணேதான்மீங்கானில்போட்டுக் கொண்டுவிதமாகக்கடுக்காயுந்தான்றிக்காயும்- பாணேதான்மாசிக்

காய்ச்சீலுகாரம் பண்பானகொறுக்காயின்புளியுங்கூட - காணே தான் திருசுடனேகாசுகட்டி கணக்காகவகைவகைக்கு விராகன் முன்றே (ருஅ)

* தந்தம்-பல்.

மூன்றுகஇவையெல்லாம்பொடித்துப்போட்டு மூனே எலு மிச்சம்பழத்தின்சாறுவிட்டு - நன்றுகவற்றமட்டும் ரவியில்வைத் துநலமாகஅம்மியிலேயரைத்திட்டப்பா-பான்றுகப்பழச்சாற்றில் மைபோலாட்டி பண்பாகப்பொடியாக்கிவைத்துக்கொண்டு - கூன்றுகவனுதினமும்விளங்கிவாநீ கொடிதானப்பல்ரோக மோடி ப்போமே (ருக)

பல்புழுச்சாக.

போமேநீயின்னமொரு விபரஞ்சொல்வேன் பொல்லாதபு ழுவிருக்கும்பல்லுக்கப்பா - தாமேநீகன்னியுடனூலைவாங்கி தயவா கநூலதனை சொல்லக்கேளு - ஆமேநீகீழ்க்காயிநெல்லிவேரை அட வாகக்காப்பிட்டு ஆதிவாரம்-வாமேநீபச்சரிசிக்கருப்புக்கட்டி வை த்து-மசி-நசியென்று நூறுகூறே (சல)

கூறேநீநூற்றெட்டுதரமுஞ்சொல்லிக் கூறடா அவன்பேரை ச்சொல்லிமைந்தா - பாரேநீபுழுச்செத்துதீரவென்று பண்பாக வேரதனையுமற்றுனுஞ், சேரேநீபிடுங்கிவிடு மறுநாட்குள்ளே செத்துதடாபுழுவங்கேசரத்தானும்-வீரேநீபோகருடகடாட்ச த்தாலேவிதமாகஇன்னமொன்று சொல்லக்கேளே (சக)

வாய்ப்புண்ணுக்கு-எண்ணெய்

கேளப்பாவாயெல்லாம்புண்ணேவந்தால் கெணிதமுடனெ ண்ணெயொன்றுசொல்லக்கேளு- நாளப்பாவிளக்கெண்ணெய்ப டிதானொன்று நலமானசங்குஞ்சார்படிதானொன்று வீளப்பாபா ச்சாணைவாட்டித்தண்ணீர் விதமாகப்படியொன்று அளந்துவாரு, சூளப்பாநீர்ப்பூண்டுச் சாறுநாழி சுருக்கான கஸ்தூரி மஞ்சள் தானே (சஉ)

* நீர்ப்பூண்டு - நீர்முள்ளி.

தானுனகரியசீரகத்திலேறு தயவாகவகைவகைக்குவிராகன்மூன் று-கோனுனப்பொடிப்பண்ணியிதனிற்போட்டு கொடிதான அக் கினியிலெரித்துவாங்கி- பானுனஎண்ணெயைத்தான்பதத்தில்பார் த்துபண்பாகத்தான்வடித்துஎடுத்துக்கொண்டுநானுனபடியைக் கால்வீதங்கொள்ளாநாண்மூன்றுதான்கொள்ளாணங்கட்போமே

போமேநீவாய்புண்ணும்வெள்ளைபோகும் பொங்கமுடன்

தடிப்புவகைசிரங்குந்தீருந் - தாமேநீசூலையென்றகட்டுந்தீருந் தயவாகப்பத்தியந்தானுறுநாளும் - வேமேநீவெந்நீருமன்னமாகும் விதமாகமற்றுன்றுமாகாதப்பா - வாமேநீயேழாநாள் முழுகும்போது வகையாகக்கருக்கொன்றுசொல்லக்கேளே. (சச)

சொல்லுவேன்*குதிரையஸ்தியோமத்தோடு சுருக்கானவுஞ்சலுடப்பட்டைக்கூட்டி - வெல்லுவேன்கருக்கியதை கியாழம்வைத்து விதமாகவுள்ளுக்குகொள்ளச்சொல்லு - கெல்லுவேனுப்பிட்டப்பருப்பின்சாறு கெணிதமுடனீர்விட்டு அழுதுகொள்ளுமல்லுவேன்மற்றுநாள்புளியைக்கூட்டு மைந்தனேபெட்டுக்குமாகாதென்னே. (சடு)

* குதிரைஅஸ்தி-குதிரைஎலும்பு.

ஆகாதுவாழைஇலைவாழைக்காயும் அப்பனேபீராறுநாள்தான்தள்ளு - வேகாதுவாயுவென்றபதார்த்தந்தள்ளு விதமானப்பெண்ணுடையமாய்கையாகா-போகாதில்லாவிட்டால் வியாதியப்பாபொங்கமுடன்தானிருந்தால் பறக்கும்பாரு- நோகாதுகிரந்தியெல்லாமகன்றுபோகும் நோய்தீரும்போகநட கடாட்சந்தானே()

மேகதடிப்பு-புள்ளிக்கு.

தானென்றதடிப்புக்குச் சொல்லக்கேளு தயவானபாச்சானவாட்டித்தண்ணீர் - பானென்றபடிக்கால்தான் வடித்துக்கொண்டு பண்பாகநாள்மூன்று கொடுத்தபோது - கானென்றதடிப்பெல்லாமோடிப்போகுங் கனலானபுள்ளியென்றமேகந்தீருங்- கோனென்றமூன்றுகெடுக் கொள்ளும்போது கொடிதாகமூன்போல்பத்தியமாய்க்காரே. (சஎ)

அனையாப்புக்கு.

காரடாஅனையாப்புவந்தபேர்க்கு கருவாகமருந்தொன்றுசொல்லக்கேளு- பாரடா * கொல்லனுடக்கொவ்வைமூலம் பண்பாகமேற்றுலைநன்றுப்போக்கி-சேரடா * அப்பையுடக்கொவ்வைமூலஞ் செயலான வகை வகைக்குப் பலந்தான்ரண்டு - கூரடாகொடிவேலிப் பட்டையப்பா கொடிதாகபலமொன்று போடுபோடே. (சஅ)

* கொல்லங்கோவைமூலம்-ஆகாசகெருடன்கிழங்கு,

* அப்புக்கொவ்வைமூலம்-கற்கோவைகிழங்கு,

போடேநீ நீர்பூண்டு பலந்தான்ரண்டு பொங்கமுடனிதுவெல்லாம்நறுக்கித்தட்டி - சூடேநீவிளக்கெண்ணெய்படிதான்பாதிசுகமானஎள்ளெண்ணெய்படிதான்பாதி - நாடேநீமிருதாருசிங்கி

யப்பா நாயகனேவிராகன்ரண்டு பொடித்துப்போடு - கூடேநீ யிவையெல்லாமொருமொன்று கூடையிலேயின்னமொன்று சொல்லக்கேளே. (சகூ)

கேளேநீசூலைவிடக் * கருப்புக்கட்டி கெடியாகபலம்ரண்டுசேர்விப்போட்டு - வீளேநீபோகாம லிறக்கிவைத்து விதமாகப்பலமைதான் கொள்ளச்சொல்லி - சூளே நீ யெண்ணெயொரு கரண்டிக்கொள்ளசுகமாகமீரூறுவேளையப்பா - கோளேநீவாராமற்பத்தியத்தைக்கேளு கொடிதாக உப்பிட்டபருப்புனெய்யே. (நுய)

* கருப்புக்கட்டி- கற்கண்டு.

நெய்யப்பாபசுவினெய்வெந்நீராகும்நேராகஅன்னமப்பா மற்றொன்றுகா - மெய்யானயெண்ணெயைத்தான்மேலிற்பூசிமேன்மையாயேழாநாள் நீரைவாரு- வெய்யானபுளியுடனேயெல்லாஞ்சேரு விதமாகக்கட்டியதிகைந்துபோகுஞ்- செய்யானபுண்கண்டால் கிழித்துவார்த்துச் செப்புவேன் ரணங்கண்டால் * களிம்பைப்போடே. (நுக)

* களிம்பு பளாஸ்திரி

போடேநீவிளக்கெண்ணெய்முழுகச்செய்வாய் பொங்கமுடலுள்விட்டுலுள்தானப்பா - நாடேநீமுழுக்கப்பாபத்துநாளும் நலமாகயெண்ணெயைத்தான் முழுகும்போது - கூடேநீபெண்மாய்கையாகாதப்பா குணமாகி மாசமொன்று செல்லுமட்டும்- ஆடேநீயையாப்பு தீர்ந்துப்போகும் அடவாகபோகருடகடாட்சந்தானே. (நுஉ)

சகலரணங்களுக்கும்-களிம்பு.

தானப்பாகளிம்பொன்று சொல்லக்கேளு தயவானலிங்கமுடன்மிருதார்சிங்கி - ஊணப்பாரசகர்ப்பூரத்திலேடு உத்தமனேவெள்ளையென்றகுங்கிலியந்தான் - கோணப்பாகடுக்காயு மாசிக்காயுங் குணமானகாசுக்கட்டித் தான்றிக்காயும் - வாணப்பாஓரொன்டயாய்க்கல்வத்திட்டு வகையாகதானைக்கவிபரங்கேளே. (நுந)

கேளேநீபசுவினுடவெண்ணெய்ப்போட்டுகெணிதமாயொருசாமமரைத்தபின்பு - சூளேநீதண்ணியிலேபிதக்கவைத்துசுகமாகமற்றுநாலெடுத்துக்கொண்டு - கோளேநீசூலையப்பாரணத்திற்பூசகொடிதானரணங்களெல்லாமாறிப்போகும் - வேளேநீகளிம்பதுவுஞ்சுருக்குமெத்த விதமாகயின்னமொன்று விளம்பக்கேளே.

விக்கலுக்கு.

விளம்புவேன்விக்கலுக்குச்சொல்லக்கேளு விதமாகசந்தனத்தி

ன்கட்டையோடி - தளம்புவேன்சாம் பிராணி சமஞப்சேர்த்து தயவாகப்பொடிப்பண்ணிக்காகிதத்திற் - குளம்புகிறேன்சுருட்டி யதைபுகைபிடிக்கக்குணமாகவிக்கலதுதீரும்பாரு விளம்புகிறேனி ன்னமொன்று சொல்லக்கேளு விதமாகக்கலிங்கமொன்று சொல் லுவேனே. (நடு)

சன்னிகள்பசாசுகள் - விஷிங்கள்மயக்கத்துக்குஅகத்தீசர்கவிக்கம்,

சொல்லுவேன் கிராம்போடுமிளகுசுக்கு சுகமானவரையெ ன்றபருப்புகூட்டி - வெல்லுவேனிவையெல்லாம் விராகனென்று விதமாகஅகத்தியனுர்க் குழம்பைக்கேளு - சொல்லுவேன் விராக னதுகால்தான்கூட்டி சுகமான * மேனிச்சார்தன்னுலாட்டி, மல் லுவேன் வெற்றிலையின்சாற்றுலாட்டி மைந்தனே கயிறதுபோல் வைத்துக்கொள்ளே. (நசு)

* மேனி-குப்பைமேனி,

கொள்ளடாமுருங்கையிலைச் சாற்றில்தேய்த்துக் குணமாக க்கண்ணிலேபோட்டபோது மெள்ளடாசன்னிமுதற் பசாசுபோ கும் மேன்மையாய் விஷிமோடிமயக்கம்போகும்விள்ளடாபோ கருட கடாட்சத்தாலே விளம்பினேன் புலிப்பாணிவிளக்கமாக- க்கள்ளடாமனத்தோர்க்கு கட்டொணுது கருவானவைத்தியந்தானி ன்னங்கேளே. (நஎ)

முகசன்னிக்கு-எண்ணெய்.

கேளேநீமுகசன்னிநோய்க்கெண்ணெயொன்று கெனிதமு டன்தேங்காய் நெய்படிதானென்று- சூளேநீவசம்பிலைடுவெள் ளைப் பூண்டு சுகமாக ஓமமொடுசதமாங்குப்பை- வாளேநீவகைவ கைக்கு விராகன்பத்து வளமானபெருங்காயம் விராகனென்று- ஆளே நீ மாவிலிங்கம் ஆலின்பட்டை அப்பனே நொச்சியொடு பெருமரமுமாமே. (நஅ)

ஆமேநீபட்டைவகை சொல்லக்கேளு அடவாகவகைவகைக் குவிராகன்பத்து - தாமேநீ யிவையெல்லா மிடித்துமைந்தாதய வாகசரக்கெல்லாம் பொடியாய்ப்பண்ணி - வேமேநீயெண்ணெ யிலேபோட்டுக்காச்சி விதமானகடுகுபதந்தன்னில்வாங்கி - போ மேநீமுழுகிடவே பறக்குஞ்சன்னி பொங்கமுடநார்விட்டு நார் தான்முழுகே (நக)

சன்னிக்கு எண்ணெய்.

முழுக்கைவிட்டுயெண்ணெயொன்றுசொல்லக்கேளு முறிந் தோடுஞ் சன்னியப்பா எண்ணெய்கண்டால் - பழுக்கான வேப் பெண்ணெய்படிதானென்று பண்பான சிறுபானைதன்னில்வார்த் தி - அழுக்கான மயிர்பீலி யிலைதான்பத்து அப்பனே நறுக்கி

நன்முயதனிற்போட்டு - சுமூக்கான சூடலெடு சாம்பிராணி சுக்
கோடுதிப்பிலியு*மரத்தைக்கூட்டே. (சூல)

* அரத்தை சிற்றரத்தை

கூட்டப்பாபெருங்காய மோமத்தோடு குணமானகிராம்ப
ப்பாமிளகுகூட-நாட்டப்பர ரசகர்ப்பூரத்திலேடு நல்மானதேச
வரஞ்சதமாங்குப்பை- கூட்டப்பா இவைஎல்லாம் பொடியாய்ப்
பண்ணிகுணமாசிலையிலே முடிந்துகொண்டு சாட்டப்பாவகை
வகைக்கு வராகனென்று சாதகமாயடுப்பேற்றிதியைமூட்டே. ()

மூட்டப்பா சிறுசட்டிக்கொண்டு மூடி முக்கியமாய்க்குப்பு
றவேமூடவேண்டுங் காட்டப்பா அக்கினியையெரித்தபோது கடி
தாக எண்ணெயிலேதியேபற்றும்- மாட்டப்பா அதையிறக்கிவைத்
தபோதுமைந்தனேசுடர்காட்டப்பற்றும்பாரு - மூட்டப்பாசட்
டிகொண்டுமூடும்போதுமுக்கியமடாதனலடங்கிவாசமாமே. ()

ஆமேநீயடுப்பைமிக * அணைத்துப்போட்டு அப்பனேயா
றவிட்டு இறக்கிவைத்து- தாமே நீசட்டியிலே வடித்துக்கொள்ளு
தயவான இஞ்சிச்சாற்படி யுங்கால்தான் - வேமேநீவெள்ளுளித்
தயிலமப்பா விதமாகக்கால்படிதா னளந்துவாரு - போமேநீ*
அண்டத்தின்தயிலமப்பா பொங்கமுடன்படிவீச மதிலேவாமோ

* அணைத்தல் - தீயாற்றல், *அண்டத்தின்தயிலம்-கோழிமு
ட்டைத்தயிலம்

வாமோ நீசுக்கப்பாவிராகனுறு வகையாகசலமதுதான்படிதா
னலு - சீமோநீபொடிபண்ணிக் கியாழம்வைத்து சிறப்பாகக்கால்
படிதானதிலேவாரு - பாமோநீயொட்டைத்தூள்கழஞ்சியொன்று
பாங்காக அடுப்பேற்றித் தியைமூட்டி - கூமோநீகடுகுபதந்தனிலி
றக்கி குணமாகக்கலசத்தில் வார்த்திடாயே (சூச)

வார்த்தவுடன் கணபதியைதுதித்துநாடி வகையாக சோடச
மூந்தூபஞ்செய்து - பார்த்தவுடனுள்ளுக்குக் கொடுத்தபோது
பாங்கானசன்னிமுதல் வலிப்புதோஷிங்- காத்தவுடன்மூன்றுநாள்
கொடுக்கும்போதுகாரடாபத்தியந்தானென்றுமாகா- சேர்த்தவு
டனேழாநாள்நீரைவார்த்து செயலானஉப்புமுதல் கூட்டலாமே
* சோகை-காமாலை விக்கம்-நீர்க்கோவைபாண்டு - மகோதரம்
பிலிகை-இவைகளுக்கு-கியாழம்.

ஆமேநீ நீர்முள்ளி கீழ்க்காய்நெல்லி அப்பனே வீழிவேர்
கோவைத்தண்டு - வாமேநீபூவரசம் பட்டை*கையான் வளமான
* செற்தொட்டி வேட்டிலேடு-தாமேநீசிறு பூளைவேரிலேடுதய

வாகச்சம்புடையதுளிருமப்பா - நாமேநீநெருஞ்சில்வேர்சிறுகீ
ரையின்வேர் நலமானநிலவாகைஊஞ்சல்பட்டைக்கேளே (சுசு)

*கையான் - கரிசலாங்கணி*செந்தொட்டி-செங்காஞ்சொ
றி * சம்பு- நாவால்

கேளேநீஊஞ்சலென்ற பட்டைக்கூட்டி கெணிதமூடன்வ
கைவகைக்குப்பலந்தானுறு - சூளேநீசரக்குவகைசொல்லக்கேளு
சுகமானகடுக்காய்ரோகணியுங்கூட்டி- வீளேநீகருஞ்சீரகத்திலே
டுவிதமானகாட்டுச்சீரகமுங்கூட்டு - பாளேநீயில்லேயப்பாதிப்பி
லியுங்கூடப்பண்பானவகைவகைக்குவிராகனுறே (சுள)

ஆறேநீயிவையெல்லாமிடித்துத்தோண்டி அடவாகஆறுபங்
காய்நிறுத்துக்கொண்டு - ஊறேநீயொருபங்கு பாண்டத்திட்டு உ
த்தமனேநாலுபடிசலத்தைவார்த்து - கூறேநீயெட்டொன்றுய்க்
குருகக்காய்ச்சி குணமாகத்தான்பிழிந்துவடிதான்கட்டி - சேரேநீ
கொடுத்துவர ஆறுநாள்தான் - செயலான பத்தியந்தா னுப்
பாகாதே (சுஅ)

ஆகாதுசோகைகாமாலை விக்கம் அடவானநீர்க்கோவை பா
ண்டுபோகும் - போகாதமகோதரமும் ப்ளிகையும் போகும்
பொருமலுடன்மேலிலேப்புத்தீர்ந்துபோகும் - நோகாதுஏழா
நாள்நீரைவாரு நுணுக்கமாயுப்பிட்டப்பருப்புங்கூட்டி-வேகாது
மற்றுநாள்புளியுஞ்சேரு விதமாகஇந்தநோய்தீரும்பாரே (சுக)

பித்தவெடிப்புக்கு.

பாரேநீபித்தவெடி வந்ததானுற் பாங்கானமருதுடையஇலை
யைவாங்கி - சீரேநீபசுவின்பா லூறவைத்துச் சிறப்பாகமூன்
றுநாட்குடிக்கச்சொல்லு - வீரேநீபத்தியந்தான்பாலுஞ்சோறு
ம்விதமாக ஏழாநாள் நீரைவாரு - பேரேநீபோகருடகடாட்சந்
தாலே பேதமில்லேப்புலிப்பாணிபாடினேனே (எல)

நீரிலிரத்தங்கண்டால்.

பாடினேனிர்தனிலேரத்தம் வீழ்ந்தால் பாங்காகபுழுங்கரிசி
பலந்தானென்று - கூடினேன்விராலியிலேபலந்தானென்று குண
மாகவரிசியைத்தானூறவைத்து- சாடினேனிடித்தெடுத்துக்கொடு
ப்பாயப்பாசார்வாக மூன்றுளாறுவேளை-நாடினேனிந்தவிதங்
கொடுத்தபோதுநடுதடுங்கியோடிவிடுந்திண்ணந்தானே (எக)

முழங்கால்-வாதம்.

தானென்றமுழங்காலின்வாதத்துக்கு தயவாகவிழியிலைப்பு

ண்ணுக்கப்பூண்டுங் - கோனென்றஆவரையினிலையுங்கூட குணமா
கஇலைமூன்றுஞ் சமனுய்ச்சேர்த்து - தேனென்ற வெள்ளுள்ளிப்
பூண்டோமூன்றுந் - தெளிவாகத்தானிடித்து எடுத்துக்கொண்டு-
வேனென்ற விளக்கெண்ணெய்யொன்றில்விட்டு விதமாகவேதிட்
டுக்கட்டிப்போடே (எஉ)

போடேநீயிந்தவிதமாறு நாளும்பொங்கமுடன் வேதிட்டுக்
கட்டும்போது-ஆடேநீமூழ்காலின்வாதமெல்லாம் அகன்றோடி
போய்விடுமகலத்தானை-கூடேநீநாட்சென்றுல் பிடித்துக்கொள்
ளுங்குணமாகமாட்டாதே கூர்ந்துபாரு-தேடேநீபோகருடகடா
ட்சத்தாலே தெளிவாகபுலிப்பாணிவிளம்பினேனே (எஊ)

இரணங்களுக்குப் புகை.

விளம்பினேனின்னமொரு கருவைக்கேளு விதமானரணங்க
ளென்றவியாதிக்கெல்லாந், தளம்பினேன்* கொழுச்சியுடவேரும்
பட்டைதயவாகயூறவைத்துநையத்தட்டிக்- குளம்பிறேன்சுங்கானி
ல்பட்டையிட்டுக்குணமாகலிங்கமப்பாவிராகன்பாதி - நளம்பிறே
ன்சுங்கான்மேல்வைத்துப்பின்னும் நலமாகமூன்பட்டை நிறைய
மூடே (எசு)

கொழுச்சி-கொட்காய்வேளை.

மூடியபின்தணலைவைத்துப்புகையைவாங்கி முக்கியமாய்விழுங்
கியதைசுவாசத்தன்னில் - நாடியமுன்னுள்மூன்று வேளையாகும்ந
லமாகக்குடித்தவுடன்பாற்சோறுண்ணு-தேடியபின்னேந்தாநாட்ப
த்தியமாய்க்காரு தெளிந்தபின்பு ஆறுநாள்தலைமுழ்கு-பாடியபின்
னேழாநாளுப்பைக்கூட்டிப் பண்பாகளட்டநாள்புளியைச்சேரே

தீரும் வியாதி.

சேரப்பாகரப்பனென்ற வகைகளெல்லாஞ்சிறப்பாக ஈரா
றுநாள்தான்தள்ளு - பாரப்பாகண்ணுவலி கன்னேறுசையோடுபா
ங்கானவிற்புருதிகண்டமாலை-வீரப்பாஅரையாப்பு சூலையோடு வி
தமானபிளவையொடுலிங்கப்புற்று, கூரப்பாரணங்களென்றநோ
ய்களெல்லாங்கூசாமலோடிவிடுங் கொள்கைபாரே (எசூ)

வாய்வுகுத்தலுக்கு-கியாழம்.

பாரப்பாவாயுவென்ற குத்துக்கேதான் பண்பானகொடி
வேலிப்பட்டையோடு-வீரப்பாசுக்குடனேபறங்கிப்பட்டை வித
மானபிரம்பினுடகிழங்குங்கூட - சேரப்பாவகைவகைக்கு விரா
கன்மூன்று செயலானநாலுபடி சலத்தைவிட்டு - கூரப்பா எட்
டொன்றுய்க் கியாழம்வைத்து கொடுத்தவுடன் வாயுவென்றமே
கம்போமே (எஎ)

பேரமப்பாஅந்திசந்திமூன்றுநேரம் பொங்கமுடன்குடித்
துவிடவாயுதீரும், ஆமப்பாபத்தியந்தானுப்பாகாதுஅடவாகவை
ந்தாநாளெல்லாங்கூட்டு-வாமப்பாகொடிவேலிசுக்குங்கூட்டு-வகை
யாகக்கியாழம்வைத்துண்டபேர்து-தாமப்பாகொடிவேலிசருக்கு
மெத்தத யவாகவாயுவெல்லாங்குணமதாமே. (எஅ)

கிரந்திக்கெண்ணெய்.

குணமாகப்பூசினிக்காய்ச்சாறுபடிரண்டு குருவானதாழையு
டவிழுதுச்சாறு-மண்மாகுங்கற்றுழை குமிழின்சாறு மைந்தனே
நெல்லிக்காய்கையான்சாறும்,வணமாகும்வல்லாரை வில்வத்தோ
டும்வளமான கொடுப்பையப்பாவிழியோடு- சிணமாகும் ஆதொ
ண்டைஇலைநீர்ப்பூண்டு சிறப்பான்அப்பையுடக்கிழங்குதானே.()

* கொடுப்பை-பொன்னங்காணி.

தானென்றபாச்சானை வரட்டித்தண்ணீர் தயவானசங்கோடு
நீர்ப்பூலாவு-மானென்ற தென்னையுடப்பாளையப்பா மைந்தனே
தக்காளிஇலையிலேடு, கோனென்றஆனையுடநெருஞ்சிலோடுகொ
டிதானஆல்விழுதும்அருகன்வேரும், பானென்றவகைக்குச்சாற்ப
டியொன்றுகும் பாங்கான்பாண்டத்தில்விட்டிடாமே (அய)

விட்டவுடன்சாறுவராமூலிஎல்லாம் விதமாகநீர்விட்டுப்பிழி
ந்துகொண்டு-சட்டமுடன்அடுப்பேற்றிவற்றக்காய்ச்சி-சட்டிதனை
இறக்கியபின்சொல்லக்கேளு- கட்டவுடன்இளநீரும்பசுவின்பாலு
ம்கருவானபனிநீரும்காடித்தண்ணீர்- குட்டமுடன்*கோசலமும்
அத்திநீருங்குணமாகவகைவகைக்குப்படிதான்வாரோ. (அக)

* கோசலம்-கோமயம்.

வாரோநீலவையெல்லாம் எட்டொன்றுக்கிவகையாகஎண்ணெ
யப்பாவடிக்கக்கேளு- சீரோநீசிற்றுமணக்கின்மூத்தைவாங்கிச்சி
ப்பாகக்காடியிலேஉள்ளவைத்து-தீரோநீபசுவின்பால்விட்டுமைந்தா
திறமாகவேகவைத்து உலரப்போட்டு-காரோநீஇளநீரா லெண்ணெ
யூற்றிக்கணக்காகஐந்துபடிஎன்னெய்வாரோ. (அஉ)

வாரித்தபின்புவேருவகைசொல்லக்கேளு வகையானநிலப்ப
னையும் * அசுவகெந்தி,காத்தபின்புநிலக்குமிழுஞ் சித்திரமூலங்க
ருவானதாமரையின்கிழங்கிலேடு, ஏத்தபின்புபூமிசர்க்கரையுங்கூ
ட்டு இதமானதுத்தியின்வேர்*நீர்நெருப்பு, சேர்த்தபின்புவகை

வகைக்கு பலந்தானென்றுசேர்த்தரைத்து எண்ணெயிலேபோட்டிடாயே. (அக)

* அசுவகெந்தி-அக்கரக்கிழங்கு * நீர்நெருப்பு-கல்லுருவி.

போட்டபின்பு சரக்குவகைசொல்லக்கேளு பொங்கமுடன் சாதிக்காய்சாதிபத்திரி,கேட்டபின்புலவங்கமதிமதுரமாஞ்சில்கெணிதமாய்ச்சோம்போடு ஏலமப்பா, மூட்டபின்புதிரிகமுகுதிரிபலாதி முக்கியமாய் வெந்தயஞ்சீரகமுமாகும், நாட்டபின்புகஸ்தூரிமஞ்சளோடு நலமானசோசனையும் பூரமாமே. (அச)

ஆமேநீவால்மிளகு கசகசாவும் அடவானசிறுநாகங் கடுக்காய்ப்பூவும், வாமேநீமல்லிகைதாளிசமாம்பத்திரிவகையான * சிறுலவங்கங்காரீபோகந்தான், தாமேநீசினிகற்கண்டிலேடு தலையான * கூகைநீறு* முத்தக்காசும், ஆமேநீவகைவகைக்குக் கழஞ்சி மூன்றுஅடவாகப்பொடிப்பண்ணிப்போட்டிடாயே. (அடு)

* சிறுலவங்கம்-சன்னலவங்கப்பட்டை
* முத்தக்காசு-கோரைக்கிழங்கு
* கூகைநீறு-கூகைக்கிழங்கின்-மா

போட்டபின்பு ஆவினெய்ப்படிதானேந்து, பொங்கமுடன் தானளந்து அதனில்வாரு, நாட்டபின்புமெழுகுபதந் தனிலிறக்கி நாயகனேகடுகோடே ஒன்றிலூற்றிக், கூட்டபின்புகணபதியைப்புகழ்ந்திநாடி குருவினுடதாள்பணிந்து பூசைசெய்து, ஆட்டபின்பு எண்ணெயொருகரண்டிகொள்ளு அடவாகப்பத்தியந்தானில்லைத்தானே. (அசு)

தானென்றவாயிலேதான்புண்ணிலேடு தயாகத்தடிப்புமுதல்புள்ளிமேகம், வானென்றசெங்கிரந்தி கருங்கிரந்தி வளமானபிரமியங்கள்கிரந்திபுண்ணு, கோனென்றபெருஞ்சிரங்கு சிறுசிரங்கு கொடிதானமேகங்களிருபத்தொன்றுந், தேனென்றதேகமப்பா அருணன்போலாந்தெளிவானபோகருடகடாக்ஷந்தானே. (அள)

மேகம்-உக-க்ரும்-வாய்நாற்றத்திற்கும்
எண்ணெய்.

தாளுகஇன்னமொன்று சொல்லக்கேளு தயவானவிளக்கெண்ணெய்ப்படிதான்ரண்டு, மாளுகஇளநீரும் பசுவின்பாலுமைந்தனேகாடியுடன் பொன்னுங்கண்ணி, கோளுகஆதொண்டை இலைவல்லாரைக் குணமானவில்வயிலை அறுகன்வேரும், வாளுகள்ளியையும் வாட்டித்தண்ணீர் வளமாகநீர்ப்பூண்டு சாணிப்பாலே ()

பாலப்பாவகைவகைக்கு படிதானென்று பாங்காகசரக்குவகை சொல்லக்கேளு, சாலவேவெந்தயஞ்சீரகத்திலேடுசார்வாகக்கொ

த்திமல்லிசிறுநாகப்பூ கோலமூடன்சாதிக்காய்கிராம்புஏலக்குண
மான அதிமதுரங் கூகைநீருஞ், சேலமாய்ச் சீனமென்ற காரந்
தானுஞ்செயலான வகைக்குவகைவிராகனென்றே (அகூ)

ஒன்றான இவைபெல்லாம் பொடித்துப்போட்டு உத்தமனே
சர்க்கரைதான் பலமே யொன்று, பன்றுகக்காச்சியது மெழுக
தானுல் பக்குவமாய்த்தான்வடித்து எடுத்துக்கொண்டு, நன்றுக
துட்டெடைதான் கொள்ளும்போது நலமாகு மண்டபத்தில்கு
டேதப்பா, வொன்றுகமேனியதுஉளரும்பாரு வுத்தமனேவாய்
நாற்றம்போகும்பாரே (கூய)

பாரப்பாபோகருடகடாக்ஷித்தாலேபண்பானபுலிப்பாணிவி
ளங்கத்தானுஞ்- சீராகக்கொக்கோகத்திரட்டொன்றப்பா திரமுட
னே நூற்றைம்பதுவுஞ்சொன்னேனுங் - கூரப்பா வாடைபதினெந்தி
ற்சொன்னேனுங் குருவான ஞானமொடு தொண்ணூற்றுறு- வீர
டாசோசியமூன்னூற்றுக்குள்ளே விளம்பினேன் நேத்திரம்போ
ல்தோணும்பாரே (கூக)

எலிகடி - யஅறு-ம்

பாரேநீஇன்னமொன்று சொல்லக்கேளு பதினெட்டு எலிக்க
டிக்குமருந்தைஅப்பா- வீரேநீகரும்பூனை மலத்தைவாங்கி விதமா
கக்கழற்சிக்கா யளவுசேர்த்து - சேரேநீமூன்று நாளாறுவேளை
செயலாகக்கொண்டிடவேதிரும்பாரே (கூஉ)

பாரப்பாஆறுநாள் பத்தியமேகாரு பண்பானவுப்புமுதலொ
ன்றுமாகா - வீரப்பாஏழாநாள் தலையைமுழுகுவிதமாகஉப்பிட்
டபருப்புமாகுஞ் - சேரப்பாஎட்டாநா ளெல்லாங்கூட்டுச்செய
லாகநாட்சென்றுல் சொல்லக்கேளு, கூரப்பாமூன்றுகெடுகொ
ண்டபோது குணமாகஎலிகடிகள்தீருந்தானே (கூங)

பேய்நரிநாய்கடிக்குமருந்து,

தானென்றபேய்நரி நாய்கடித்ததானுல் தழைத்த மணித்தக்
காளி யிலைச்சாரப்பா, பானென்ற படிக்கால்தான்கொடுப்பத
ப்பா பாங்காகமூன்றுநாளாறுவேளை, கோனென்றபத்தியந்தா
னுப்பாகாது குணமாகு மேழாநாள்நீவாரு - வேனெ
ன்றபேய்நரிநாய்க் கடிதான்தீரும் விதமாகுமிதின்தழையைமே
லேபூசே (கூச)

பூனைகடிதீர மூலிகை:

பூசியேபூனையுடக்கடிதான்தீர புனிதமுள்ள * பூனைதொழும்
பட்டைவாங்கி - ஆசியேபசுவின்பால் தனிலரைத்து அப்பனேப

* பூனைவணங்கி-குப்பமேனி-தொழும்-ஏனங்கும்

த்தியமாய்க்குடிக்கச்சொல்லு - கூசியேமுன்போல பத்தியமே காருகுணமுள்ளநீலிவேர்தனைஅரைத்து - வாசியோராறுநாளும் பூசவகையாகப்பூனைகடிதீருந்தானே (கூடு)

வண்டுகடிக்கு-மருந்து.

தீரும்பா வண்டுகடிவந்தபேர்க்குத் திறமாக மருந்தொன்றுசொல்லக்கேளு - மாருமப்பாவெள்ளாட்டுக்கருத்தபாலுமை ந்தனேதினையரிசிபடிதான்காலு- வீருமப்பா மூலியொன்று அறியச்சொல்வேன்விதமான ஆடுதொடாமூலிச்சாறு கூருடனே வேகவைத்து அந்திச்சந்தி குணமாகக் கொண்டிடவே தீரும்பாரோ (கூசு)

பாரோநீசாரதுதான் பழுதான்விதம் பண்பானபத்தியந்தானுப்பாகாது-கூரோநீ வெள்ளாட்டுப்பாற்சோருண்ணு குணமாக ஏழாநாள்நீராவாரு - சேரோநீவசம்புடனே நீலிவேருஞ்சிறப்பாகத்தானுரைத்துப்பூசுபூசு - தீரோநீவண்டுகடியெல்லாம் போகுந்திறமானபோகருடகடாக்ஷந்தானே (கூஎ)

தானேதானிதுபோலே விஷமுமுண்டு தயவானமேவகையிதுபோலுண்டு - கூனேதான்செய்தொழிலு மிதுபோலுண்டு குடிலமாய்த்தாமையு மிதுபோலுண்டு- சோனேதானிதுபோலே தீராவிட்டால் துணிவாக ரசபதங்கம் கொள்ளச்சொல்லு- ஊனேதான்கண்டுகண்டு மருந்துசெய்நீ உத்தமனேஇல்லாவிட்டாலேய்க்கும்பாரோ (கூஅ)

பூரான்-கடிதீர.

பாரப்பாபூரான்தான் கடித்தபேர்க்குப் பண்பானஎருக்கம்பூநரம்பைப்போக்கிச் - சீரப்பாபூவேழு கொடுத்துப்பாருசிறப்பாக * ஞாளிமலம் புகையைக்காட்டுக் - கூரப்பாநாட்செல்லுமண்டலங்கொள் குணமாகப்பத்தியந்தானில்லப்பாரு- வீரப்பாபூரான்தன் தடிப்புமாறும் விதமாகஅதின்விடமும்தீருந்தானே (கூக)

* ஞாளிமலம் - நாய்மலம்,

செய்யான்-பெருச்சாளி-கடிக்கு.

தானென்றசெய்யான்தான் கடித்தபேர்க்குத் தயவாகக்கொல்லனுடக் கோவைமூலம் - பானென்றபாக்களவுகொள்ளச்சொல்லு பண்பான * மயிற்பீலி புகையைப்போடு - கோனென்ற செய்யான்தன் விஷமும்போகுங் குணமானபெருச்சாளிகடிதான்தீர்க்க - வேனென்றஅறுகம்வேர்வெள்ளிதன்னில் விதமாகக்குடித்தவுடன் தீர்ந்துபோமே (ா)

* மயில்பீலி - மயிலிறகு

தேள்காலிவிஷந்தீரமூலிகை.

போமப்பாதேள்காலி கடித்தபேர்க்குப்போங்கமுடன்பெ
ரியநங்கைவேளைத்தானும் - வாமப்பாநீரிலே உரைத்துப்பூசுவள
மாக * மட்டிப்பால்புகையைப்போட்டு-ஆமப்பாகடுகடுப்பு அட
ங்கிப்போகும் அப்பனேதேள்காலி விஷமுந்தீரும் - நாமப்பா
போகருடகடாக்ஷத்தாலே நலமாகப்புலிப்பாணிபாடினேனே.

* மட்டிப்பால் சாம்பிராணி,

சகலவிஷங்களுந்தீரமருந்து,

பாடியதோர்விஷங்களெல்லாந் தீரவேதான் பண்பாக எட்
டிபழந்தன்னைவாங்கி, கூடியதோர்சட்டியிலே வேண்மட்டுங்கு
ணமாகத்தானெடுத்து வேப்பெண்ணெய்விட்டு, நாடியே அடுப்
பேற்றி வேகவைத்து நலமாக உருட்டியதைச் செப்பில்மூடி,
தூடியேவிஷந்தீண்டி வந்தபேர்க்கு துதுவளங்காயளவு கொடு
த்திடாயே. (ஈஉ)

விஷத்துக்குநசியம்-கலிக்கம்,

கொடுத்திடவே விஷத்துக்கு நசியமொன்று குணமாகநீல
மென்றதூரிசைவாங்கி - அடுத்திடவே விராகனைதூணியிலைவை
த்து - அடவாகசிறு நீராலந்நசியம்பண்ணு - ஏடுத்திடவேவிஷமெ
ல்லா மிறங்கிப்போகும் இதமானகலிக்கமொன்று இயம்பக்கேளு, தொடுத்திடவேசிறுபூளைகசக்கிக்கண்ணில் தோராமல் சிங்கெ
ன்றுகொட்டிப்போட (ஈஊ)

சிறுபாம்புகடிக்குமருந்து.

போடப்பாசிறுபாம்புகடித்தபேர்க்குப் பொங்கமுடன்தி
றுகுறிஞ்சான் வேளைவாங்கி, நாடப்பாவெந்நீரா லரைத்துகொ
ண்டு நலமாகஅந்திசந்திமூன்றுநாளுண்ண, வாடப்பாபத்தியந்தா
னுப்பாகாது வளமான ஏழாநாள்சலத்தைவாரு,சாடப்பாசிறுபா
ம்புதடிப்புமாறுஞ்சார்பாகபோகருடகடாக்ஷத்தானே (ஈச)

குஷ்டத்துக்குமருந்து.

தானென்றகுஷ்டநோய்வந்த பேர்க்குத் தயவாகமருந்தொ
ன்றுசொல்லக்கேளு, ஊனென்றசெல்வலரி வேளையப்பாஉலரவி
ட்டுக்குழித்தயிலமாகவாங்கிப், பானென்றகுப்பிதனி லடைத்துக்
கொண்டு பண்பாகச் சிறுகுச்சித் தயிலத்திட்டு,னென்றஒருதுளி
த் தண்ணீரில்குத்தி இதமாகத்தான்கலக்கிக் கொடுத்திடாயே.(ஈடு
கொடுத்திடப்பாதாள் மூன்றுகாலமேவினைக் * குருதியப்பா

* குருதி இரத்தம்

வடியுமடா ரணங்கள்தோறும் - ஆடுத்திடப்பா பத்தியந்தானுப் பாகாது அடவாகவேழாநாள்நீரைவாரு, விடுத்திடப்பா உப்பிட்ட பருப்புக்கூட்டி விதமாகமற்றுளுள் புளியைச்சேரு - எடுத்திடப் பா குஷ்டநோய்தீர்த்துபோகும் இதமானபோகருட கடாக்ஷ நந்தானே. (ாசு)

மருந்திட்டுக்குச்சிட்சை.

தானுக இன்னமொன்றுசொல்லக்கேளு தயவாகமருந்திடுகொ ண்டபேர்க்குக்-கோளுகளண்ணெயிட்டுமுழுகச் சொல்லிக் குண மாகரசம்விட்ட அன்னமீப்ந்து-வேளுகத்தேங்காயின்பாலைவாங்கி விதமாகக்கரும்பாலைச் சக்கரையுஞ்சேர்த்து - வாளுகத்தேங்காயி ன்பாலையுண்டு வகையாகக்கம்பளமேல் படுக்கச்சொல்லே. (ாஎ)

சொல்லப்பா முருங்கையென்ற இலையைவாங்கி சோரவே வதக்கியதைச் சாற்பிழிந்து - அல்லப்பாசாறுபடி காலையாகும் அடவாக ஆவின்பால் நேரேசேர்த்து அல்லப்பாகாலமேகொடு த்தபோது அடவாகப்பேதியிலே மருந்துவிழும்- நல்லப்பாவி ழுந்தவுடன் ஸ்நானம்பண்ணு நலமாகவேணதெல்லாங் கூட்டிக் கொள்ளே. (ாஅ)

நஞ்சுண்டவர்க்குங் கெர்ப்பமழிக்கவும்.

கொள்ளவே நஞ்சுதின்றபேர்கட்கெல்லாங் குணமாக * நீலி வேர்பட்டைதன்னை அள்ளவேகாடியிலே அரைத்துஉள்ளுட்ட அட வாக நஞ்சுகக்கிமயக்கம்வாங்கு, மெள்ளவே அளிகருவை யழிக்க வேண்டில்மேன்மையாய்ச்சேர்தலையை இடித்துமாப்போல், தள் ளவேபூநீறுபடிதான்போட்டுத் தயவாகநீருபடியொன்றுவாரே.()

* நீலிவேர்-அரிவிவேர்

வாரப்பாபடிகால்தான்வாங்கிக்கொண்டுவகையாக முந்நீரில் பிசைந்துபின்பு, தாரப்பாஅந்திசந்தி மறுநாளொன்று தான்கொ டுக்கசர்ப்பமது அழிந்துவிழுங் - கூரப்பா இந்நீரைமூன்றுநேரங் குறிகண்டால்மாவப்பா கொக்கப்போகா - சேரப்பாஇந்தரிசிக ஞ்சிவைத்து சிறப்பாகக்கருப்புக்கட்டிப்போட்டுக்கொள்ளே(ாய

கொள்ளவேஉதிரமது அதிகங்கண்டால் குணமானவேம்பின்ப ட்டைநன்னத்துவைத்து-நள்ளவேமோருவிட்டு பிழிந்துக்கொண்டு நலமாகஒருநாளிலாறுவேளை-மெள்ளவேகொடுத்துவிட உதிரம்நி ற்குமேன்மையாயாறுதிங்களப்பாகேளு - தெள்ளவே குச்சியிலே துணியைச்சுற்றி தெளிவாகஎருக்கம்பால் தடவிவையே (ாயக)

வையப்பா * அல்குலிலேவிரலேவிட்டு வகையாகச் சுத்தியங் கேபார்க்கும்போது, ஐயப்பா உந்தியிடப்பள்ளம்போலே அட வாககுழியொன்றுஇருக்கும்பாரு, வையப்பா கருக்குழிதான்வா யைமூடி வகையாகத்தானிருக்கு மறிந்துபார்த்து, கையப்பா விரலோடேகுச்சியிட்டுக்கணக்காகநெல்நீளம்வைத்துப்பாரே ()

* அல்குல்-பெண்குறி.

பாரப்பாஉதிரமதுகாணுமட்டும்பண்பாக இம்முறைபோல் பாங்காய்வைநீ, சேரப்பாமல்லார்த்து படுக்கச்சொல்லு செய லாகவிடியமட்டுமிந்தப்பாகம், வீரப்பாஇப்புவலி சுரமுங்கா ணும், விதமானத்தலைவலியு மதிகமாகுங் - கூரப்பாதிங்களொருப த்தாலுங் குணமாகக்கழிந்துவிடுந் தின்னந்தானே. (நூயங)

விதவையைக்கூடபிள்ளைஇல்லாதிருக்க.

தானப்பாகன்னியர்கள் விதவைகூடித் தான்தழுவ வேணு மென்றால் சொல்லக்கேளு, மானப்பா தலைமுழுகும் * பக்கத் தன்னில்மைந்தனேபுணர்ந்திடவேகோர்ப்பமில்லை, வீணப்பாஇது வறியமாட்டாமல்தான் விதமாகக்குலைகள்வந்து நேரும்பாரு, ஊ ணப்பா இதுவல்லோ பாவம்பாவம் உத்தமனே அறிவாலே அறிந்துதானே. (நூயச)

* பக்கம்-வீட்டுக்குத்தூரமாகிற-பட்சத்தில்.

பார்வைக்கும்-குளிகை.

தானென்றபார்வைக்குக்குளிகைசொல்வேன் தயவாகபுண்ணாக் கிலையும்வீழியோடும் - மானென்றஆவினாயுஞ்சங்குகோவைமைந் தனேசின்னியொடு*முட்டைநாறி, வானென்றநிலவாகை * இராச கனிவித்துவளமானமுசல்கள்துவாகையப்பை - கோனென்றகோ ழியுடஅவையப்பாகுணமானஅறுகம்புல் தக்காளித்தானே. ()

* முட்டைநாறி-எருமுட்டைப்பீநாறி

* இராசகனிவித்து எலிமிச்சம்பழம்.

தானப்பா * வேலியென்ற பரித்திகூட்டித் தயவானமுளகா யினிலையுஞ்சேர்த்து- பானப்பா * பெருமருந்து இலையுங்கூடப் பண்பான தோதகத்திமேனியப்பா, ஆனப்பா இவ்வைபையுட இலையுங்கேளு அடவாகவகை வகைக்குவிராகனந்து - ஊனப்பா பெருங்காயம்விராகனந்துஉத்தமனே * சீனமதுவிராகனஞ்சே

* வேலிப்பருத்தி-உத்தாமணி * பெருமருந்துதலைச்சருளி

* சீனம்-படிகாரம்

அஞ்சப்பா இவையெல்லா மரைக்கும்போது அடவாகஎலு மிச்சம் பழச்சாரிவிட்டு, மஞ்சப்பாநாற்சாம மரைக்கும்போது, மைந்தனே மெழுகதுபோ லிருக்கும்பாரு- தஞ்சமாய்க்குளிகை யப்பா கழஞ்சிவீதம், தான்சேர்த்து நிழலுலர்த்திப் பதனம்ப ண்ணு, வஞ்சமில்லா மந்திரத்தை ஆயிரந்தாஞ்ஜெ வகையாகதே விக்குப் பூசைசெய்யே; (ாயஎ)

தேவிக்கு - எகமூலம்;

செய்யவேமந்திரந்தான்-அம்-உம்-ஒமென்று செப்படா ப ம்மோடேறியுஞ்சேரு; பையவே ஸ்ரீயுடனே சிங்குவங்கு பண்பா கஆயிரத்தெட்டீடயோது; நையவேபார்வையுடன் சூனியங்கள் நன்ருகத்தீர்ப்பதற்குக் குளிகையொன்று, உய்யவே அப்பையுட சாற்றிற்கொள்ளுந உறவானதேங்காயின் பாலிற்கொள்ளே(ாயஅ)

சூனியந்தீரப்- புகை.

கொள்ளப்பா மஞ்சளேநீயளைத்துப்பூசி குணமான வெந்நீ ரில்ஸ்நானம்பண்ணு- அள்ளப்பாபுகையொன்று சொல்லக்கேளு அடவானஎட்டிவிரை எட்டிப்பட்டை - கள்ளப்பாசெக்கடிக்கீழ் மண்ணும்மஞ்சள் கனிவானகொட்டைவிரைத்தூளுங்கூட்டி- உள் ளப்பாமாவிலிங்கம் ஆலின்பட்டை உத்தமனேவெம்பின்மேல்கா க்கைகூடே (ாயக)

கூடேநீஆமையுட ஓடுங்கூட குணமானகுதிரையுட குளம் புங் கூட்டி - அடேநீபாம்பின்சட்டை திட்டுச்சீலை அடவாகக்கா க்கணம்பூ சிறுகோவேரு - நாடேநீமாட்டுக்கொம்பு மூஞ்சூறுத் தோல் நலமில்லாக்கம்பிளியுமுறுசுமுட்டை - சாடேநீஇவையெல் லாம்நன்ருய்ச்சேர்த்துசார்வாகத்தானிடித்துஎடுத்துக்கொள்ளே.

கொள்ளப்பாஇந்தெடைக்குகீருங்கிலியங் கொடிதாகத்தானி டித்து எடுத்துக்கொண்டு - மெள்ளப்பாபுகைபிடிப்பாய் அந்தி சந்தி மேன்மையாமத்தியமென்றவேளைமூன்றும்- தள்ளப்பாஎவ லென்றகுணங்கள்யாவுந் தருவானபுதைபில்லி ஆக்கைவைப்பு - வி ள்ளப்பாசக்கரங்கள் ஓலவாட்டல் விதமானவேர்பிடுங்கல் தீருந் தானே. (ாஉக)

பிரம்மைக்கு-அண்டபற்பம்.

தானென்றபிரமையது கொண்டபேர்க்குத் தியவாகமருந் தொன்றுசொல்லக்கேளு - கோனென்றபோகருட காடாக்ஷத்தா லே குணமானபுலிப்பாணிவிளக்கஞ்செய்தேன்-உளனென்றகபா லத்தைஎடுத்துவந்து உத்தமனேஎலுமிச்சம் பழச்சாற்றுலே-நா னென்றசீனமதைப்பொடித்துப்போட்டு நலமானகல்வத்திலரை த்திடாயே. (ாஉஉ)

அரைத்தெடுத்துவில்லைதட்டி யுலரப்போட்டு அடவாகப்புட
ம்போட்டு எடுத்துக்கொள்ளு - விரைத்தவுடன்பொடியாக்கிப் ப
தனம்பண்ணி விதமாகவிராகனெடைகொடுக்கக்கேளு - உரைத்த
வுடன் * கத்தபத்தின்பாலையப்பா உறவாகதுட்டெடைதான்ரண்
டேயாகும் - குரைத்தவுடனிஞ்சிச்சாறிதனிற்பாதி குணமாகவித
நேர்சர்க்கரையுங்கூட்டே. (நூஊ)

* கத்தபம்-கழுதை.

கூட்டப்பாஈராறு நாளேகொள்ள குணமாகஅந்திசந்தி யிந்த
பாகம் - ஆட்டப்பாநசியமதுதும்பைச்சாறு அடவாகதான்விட்டு
ச்சொல்லக்கேளு - சூட்டப்பாபேய்ப்பீர்க்குப்பேய்மிரட்டி சுக
மானபேய்ப்புடலும்பேய்க்குமட்டி - நாட்டப்பாபேயத்தி பே
யாந்தும்பை நலமானஎலுமிச்சம்பழமுமாமே. (நூச)

ஆமேநீயிச்சாற்றைத் தேய்த்துத்தேய்த்து அடவாகநூறுகுட
ஞ்சலத்தைவாரு - தாமேநீயீராறுநாள்தான்வாரு தயவாகபத்திய
ந்தான்சொல்லக்கேளு - வாமேநீபச்சரிசிபருப்பிலேடி வளமாக
தான்கொடுப்பாயுப்பாகாது - ஆமேநீதேவரொடுபிரமைபித்தம்
அடமானவஞ்சனையுந்தீருந்தானே. (நூஎ)

கிரகசாரத்துக்கு.

தீருமப்பாசாந்தியொன்று சொல்லக்கேளு திட்டமாய்க்கிரக
மென்றசாரந்தீர - சாருமப்பாபனிரண்டு ராசியோர்க்குச் சகல
மும்மாங்கிரகங்களிருக்கும்வாறு - வீருமப்பாவீடடைத்துத் தகடு
தன்னில் விதமாய்க்கும்பம்வைத்துச்சோடசஞ்செய் - கூறுமப்
பாஓமமுதல் சாந்திக்கெல்லாம் கூறுவோமந்திரத்தைக்சொல்லக்
கேளே. நவக்கிரகதியானம்.

கேளேநீநவக்கிரகதியானஞ்சொல்வேன்கெணிதமுடன் - அம்-
ஸ்ரீயும்-சம்-ஸ்ரீயும், ஆளேநீஸ்ரீநசி- ஸ்ரீமசி - ஸ்ரீம்- உம்- கிலி - அட
வாகசாச்சறீநசி- அங்கிஷிநசி - யென்று, நாளேநீ ஆயிரத்தெட்டு
ருவையோதிநலமாகசாந்திசெய்து மருந்தையூட்டு, கோளேநீக
டிவிஷிங்களெல்லாம்போகுங் கொடிதான அசாத்தியமொன்று
ந்செய்யொணாதே. (நூஎ)

செய்யாதே. பொய்க்கோபங் கொலைத்திருட்டுச் செயலான
வைத்தியங்கள்செய்யும்பக்கம், வையாதேபெண்களுடன் சேர்ந்
திடாதே மையல்மிகக்கொள்ளாதே கிருதுசெய்யாதே, வையா
தேயவரிடத்தில் வீண்பேசாதே வகையானவல்வசையே சொல்
லிடாதே, பையாதேகமலத்தில் தேனையுண்டு பண்பானவண்ட
தி போல்பொருளைச்சாறே. (நூஅ)

சூன்னியத்திற்கு-எண்ணெய்.

சாராதேசூனியங்கள் தீர்க்கயெண்ணெய் சாற்றுகிறென்சுடது ருத்தி*தவமுருங்கை - வீராதேமுயல்காதுசெந்நாயுருவிவிஷ்ணுயா குங்கோவைமிளகுத்தக்காளி - சீராதேநாய்ப்பாகல்வட்டத்துத்தி சிறப்பான்*அசுவகெந்திசிறுகீரைச்*சூரி - மீராதேநிலவாகைநன் னிப்பாலை மிதமாகவேர்க்கால்பலஞ்செப்பினேனே. (ாஉசு)

* தவமுருங்கை-தவசுமுருங்கை-அசுவகந்தி-அமுக்கரா.

* சூரி-நத்தைச்சூரி.

செப்புநெருஞ்சியுமுருங்கைவாகையோடு செழித்திருக்கும்* முட்டியுடன்நாமக்கொவ்வை- கப்பவேபேய்ப்பரித்திக் கண்டங் கத்திரிகடியமருளுமத்தைப்பேய்ப்பீர்க்கப்பை - வெப்பகலவரு மேனிபெருந்தக்காளி வேடிதமாஞ்சின்னியிலை இவைகள்சாறும்- அப்புமிதுவகைக்குவகைபடியதாக அளந்துவிட்டுஎட்டொன்றுப் க்குறுக்கிவாங்கே. (ாஙய)

* முட்டி-பேராமுட்டி.

குறுக்கியே எள்ளெண்ணெய் நாழிவிட்டுக் கூறியமுன்வேரின் வகைசூறணித்து - துறுக்கியேயலத்ததிகைப்பூண்டுமூன்று துணி யும் வவ்வால்தோல் பலமாைக்கால்சேர்த்து, மூறுக்கியேவேம் பாடம்உள்ளியோமம் முனையான கருஞ்சீரகமுங்கிராம்பு, பெ றுக்கியகாயங்கோஷ்டஞ்சாதிபத்திரி பேணுங்கோரோசனையு மு னையாக்கூட்டே. (ாஙக)

முனையாகவகைக்காைக்கால் பலமதாகு முட்டியிடி சூரணமு ம்பொடியுமொன்றுய் - வினையருக்குமெண்ணெயிலே பொடி யும்போட்டு விரவிவெந்து மெழுகுபதந் தனில்வடித்து, எனை யாளுங்கணபதிக்குமலருஞ்சூட்டியேழுபங்காய்தகூனையும் வை த்துப்போற்றி, பனையவேதேகமதில் துவளைபோட்டால் பறக் குமேசூனியங்கள்பகரக்கேளே. (ாஙஉ)

கேளேநீ முகமாறுமாங்கிஷிந்தெரிதல் கெடியம்பு தான்றெரி தல்மூட்டுச்சூனியம், நீளேநீபாவமூட்டுவிளக்கெரித்தல் நிலையா ணிமுனையடித்தல் அட்டைத்தத்தல், சூளேநீபெண்கட்டு ஆணின் கட்டு சுருக்காகஅனலெரிவுகுடல்கள்வெப்பு, வாளேநீ கம்பியொ டுசூலதிரங்கள் வட்டதிலதம்மெதிரோற்றுஞ் சூனியமாமே (ாஙஙு)

சூனியமாங்கட்டைதன்னில் புதலிபாம்புச் சுணங்குடனே ப ச்சோந்திவினியன்பல்லி, வானியபுலிமுயல் கழுதைப்பன்றி வலு முதலைநரியுடும்பு தவளைமீன்கள், ஈனியானை எலி பட்சி தலையில் வைத்து இதமாக ஈகமொடுசந்திபாதை, கானியாமோலைமுதல் ச க்கரம்வாட்டுக்கடுப்பெதிர்வைத்திடி சூனியமும்போமே. (ாஙச)

பேரானநரம்புசுற்ற யுடம்பெரிவுதானும் பொலிவுடனே வி
காரமுடன் ரத்தம்விக்கல் - நேரானபாவைசெய்து முடங்கலாக்
கி நிலையாதபிரம்மையொடு மயக்கஞ்செய்தல், மாரானகண்பட்ட
லங்கண்டமாலமதிகெட்டவிப்புருதிமாமுட்டங்கள், விரானகொ
டிமரங்கள் பாவைவைப்பு வெடிமலங்கள் வஞ்சனை சூனியமும்
போமே (ாஙகு)

மூலரோகத்து சூரணம்,

போமேநீமூலமென்றரோகந்தீரப் பூட்டுகிறேன்மருந்தொ
ன்றுசொல்லக்கேளு, ஆமேநீதூதுவளை மூலத்தோடு அடவான
மருட்கிழங்குகருணைமூலம் தாமேநீபிரண்டைவேர்நல்லஆதா
யவான காட்டுடையகருணைமூலம், வாமேநீமிளகருணை மூலந்
தானும்வளமானஅறுகினுடக்கிழங்குதானே - (ாஙசு)

* மூலமென்பது-கிழங்கு-அல்லது-வேர்.

தானென்ற நீற்பூண்டு கிழங்குமூலி தயவாகவுரலிலிட்டுத்தூ
ளாச்செய்து- கோனென்ற பொடியெல்லாஞ் சமனுய்ச்சேர்த்
துக் கொடுப்பாயே விரற்கடைதான் தேனிற்கொள்ள - நானெ
ன்ற நாற்பதுநாள் கொள்ளும்போது நடுநடுங்குமூல மெல்லா
வோடும்பாரு-வானென்ற போகருடகடாக்ஷத்தாலே வளமானபு
லிப்பாணி விளம்பினேனே (ாஙஎ)

கிரந்தி அரையாப்புக்கு எண்ணெய்.

விளம்புகிறேனெண்ணெயொன்று சொல்லக்கேளு விதமானச
ங்கோடுசங்கங்குப்பி- சுளம்புகிறேன்கருநொச்சி உடுதுரத்தி உத்த
மனேவொள்ளறுகு சின்னியோடு- தளம்புகிறேன்கிரந்திநாயகமு
ங்கூடதயவானபூவரசம் பட்டையோடு - குளம்புகிறேன்பாச்சா
னைவாட்டிதண்ணீர்குணமானநீர்ப்பூண்டுச்சார்தான்வாரோ (ாஙஅ

வாரப்பா வகைவகைக்குப் படிதான்விதந் வகையாகஅளந்து
விட்டுஎண்ணெய்நாழி - சேரப்பாவொருநாள்தான் ரவியில்வை
த்துசிறப்பாகமற்றுநாளனலேமூட்டு - மாரப்பாளட்டொன்றுப்
க் காயும்போது மைந்தனேசரக்குவகைசொல்லக்கேளு- கூறப்
பா பறங்கியுடப் பட்டை தானும் குணமான கருஞ்சீரங் கார்
போமாமே (ாஙக)

ஆமேநீகல்தூரிமஞ்சளோடு அடவானவசம்புடனே வெள்ளை
ப்பூண்டு - தாமேநீவகைவகைக்குவிராகனைந்து தயவாகஎண்ணெ
யிலேபொடித்துப்போடு - வாமேநீமெழுகுபதந்தனில்வடித்து
வகையாகபடியரைக்கால் கொள்ளச்சொல்லு- போமே நீமூன்று
நாள்கொண்டபின்பு பொலிவானபத்தியந்தானுறுநாளே (ாசல)

நாளான ஏழாநாள்தலையைமூழ்கு நலமான உப்பிட்டபருப்
பைச்சேரு-கோளானநாற்பதுநாள் *கடுகொள்ளாதே குணமா
னவாழையிலைவாழக்காயுந்- தோளானகரப்பனென்ற தெல்லாந்த
ள்ளுதெளிவானபெண்மயக்கஞ்சற்றுமாகா- பாழானகிரந்தியளை
யாப்புச்சூலபண்டானமேகமெல்லாந்தீருந்தானே. (ாசக)

* கடு-கசப்பு,

பிரமனுக்கும்-வாசவனுக்குஞ்சாபம்

தானைமுன் யுகத்தில்பிர்மாவுக்குத் தாயானபார்வதியாள்
தந்தசாபம்- கோனைதண்டாயுதத்தைப்பூசைசெய்து கொடிதா
னசாபமதுநிவர்த்தியாச்சு-தேனைதிரேதாயின்யுகத்திலப்பர்தே
வேந்திரனுக்குத்தூறுவாசர்சாபம் - மானை * தேவர்கோன்பூ
சைசெய்து மைந்தனேமுனிசாபந்தீர்ந்துபோச்சே (ாசஉ)

* தேவர்கோன்-தேவேந்திரன்

கற்சிலை

போனபின்புசொக்கலிங்கந்தன்னிற்சென்று பொன்னுலகில்
தேவேந்திரன்பட்டமாச்சு- ஆனபின்புதுவாபுரியில் போகநாதர்
அடவான கற்சிலையில் அம்மனென்று- கோனபின்பு கொங்கணர்
ருங்கருவூராரும் கூட்டிவந்துமூன்விட்டாரையன்முன்னே - கோ
னபின்பு கற்சிலையை சேர்ந்தபோது சிந்தைதனிற் சிலையென்று
அறிந்திட்டாரோ (ாசஙு)

* கற்சிலை - உருப்பட்டகல்

அறிந்தபின்பு அச்சிலையைப்பார்த்துஅம்மா அபசாரமடியே
ற்கு நிவர்த்தியென்ன - வறிந்தபின்புசிவகிரியில்தண்டபாணி ம
ன்னவரைப்பூசிக்க நிவர்த்தியாகும் - புரிந்தபின்புதேவியென்ன
சிலைதான்சொல்ல போகருமே துவாபுரியில் பூசைசெய்தார்-
சொரிந்தபின்புஅபசாரம் நிவர்த்தியாச்சு சார்வான கலியுகத்தில்
சொல்லக்கேளே (ாசச)

கேளேநீகலியுகத்திலிருநூற்றைந்தில் * கேசரிபோல்புலிப்பா
ணிபேரும்பெற்றேன் - சூளேநீசலம்திரட்டிக்கரத்திலேந்தி சுக
மாகவேங்கையின்மேல்ஏறிச்சென்று - நாளாநீசிவகிரியில்தண்ட
பாணிநாதருக்குப்பூசித்துஅருளைப்பெற்று - ஆளேநீபோகருடக்
குகைமேலேயாஅஷ்டசத்திபதிதனிலேவாழ்ந்தேன்பாரே (ாசடு)

* கேசரி - சிங்கம்

மேருவுக்கு - வடக்குமனிதர்.

பாரேநீயுகந்தோறும் சொல்லக்கேளு பண்பானமேருவுக்குவ
டபாகத்தில் - தீரேநீமனிதரப்பாதங்கவண்ணம் திகழ்மதியாமுய

ரமப்பாசொல்லக்கேளு-வாரோநீநாலாயிரமுழமேயாகும் வளமான ஆலங்கனியும்நீரோடே, கீரோநீஅருந்துறதுஅதுதானப்பா சிறப்பானசதாசிவமே தெய்வந்தானே. (நாசசு)

தானுகும்வயதுதான் நாலுலட்சம் தாயாகசத்தியத்தைக்கை விடாதார்-கோனுனபொய்யென்றுஞ் சொல்லிடாதார் குவலையங் கள்கையல்லால்வேறுன்றில்லை, சேனுனமேருவுக்குவடபாகத் தில் செயலானமனிதருட செய்கையப்பா- தேனுனபோகருடக டாட்சத்தாலே தெளிவாகப்புலிப்பாணி விளம்பினேனே. ()

விளம்புகிறேன்மேருவுக்குக்கிழக்கேயப்பா விதமானமனிதர்க ள்தாம்நீலவண்ணம்-தளம்புமோனுயரமதுதானூறுகும் தயவாகநவ க்கனியுமந்நீரோடே-கிளம்புகிறேன் அருந்துறது இதுதானப்பா கிருபையுள்ளவிஷ்ணுமேதெய்வமாகும்- நளம்புறேன்வயதுதா னிரண்டுலட்சம் நலமில்லாஅசத்தியங்களில்லைதானே (நாசஅ)

இல்லானமேருவுக்கு மேற்கேஅப்பா இருப்பார்கள் மனிதரப் பாரத்தவண்ணம் - வல்லானவுயரமது நாற்பதாகும் வகையான மாங்கனியுமந்நீரோடே-எல்லாருமருந்துறது இதுதான்பாரு இத மானபராசத்திதெய்வமாகும் - சல்லானவயதுதான் லட்சமாகும் சார்வானசத்தியமும்பொய்யில்லாரே (நாசக)

பொய்யில்லைமேருவுக்குத்தெற்கேஜயா பொங்கமுடன்மனித ருடநிறத்தைக்கேளு, மையில்லாநிறமதுதான் அந்தவண்ண மை ந்தனேயுயரமதுமுழந்தானலு, செய்யில்லா அறுசுவையுமனேக வர்க்கஞ் செயலான அன்னமொடுசருகைநீரும், எய்யானபாலோ டுகிழங்குகாய்கள்இதமான அமுர்தமதுகொள்வாருண்டே (நாருய)

உண்டானஅநேகவிததெய்வமுண்டு உத்தமனேசாஸ்திரங்கள னேகமுண்டு,மண்டானபொய்கொலையுங்களவுமுண்டுபண்பில்லா விசுவாசம்பாவமுண்டு,செண்டானமுறைமைகெட்டுமையல்கொ ண்டு செயலானபாக்கியமும்வறுமையுண்டு, கொண்டானவயதது தானூறென்பார்கள் கொற்றவனே நிசூயந்தானில்லைதானே ()

தானென்றகோயில்குளம்ஆறுமுண்டு தயவான புண்ணியமும் பாவமுண்டு,மானென்றசித்தனென்றும்முனிவனென்றும்மகிமையா ந்தபோதனர்கள் பெரியோனென்றும் கோனென்றவரசனென்று ம்குருக்களென்றும்கொடிதானபிரமலபிக்கடந்தேரனென்றும்-வா னென்றகிரகங்கள்நோய்களென்றும் வகைவகையாய்ப்பலசாதிய னேகந்தானே (நாருஉ)

தானனயோகருடகடாக்ஷத்தாலேதயவாகப்புலிப்பாணி விளக்
கஞ்செய்தேன்-வீணுகஅவரவர்கள் செய்தகர்மம் வினைந்துதடா
நோய்போலஅனேகங்கோடி-தீராதுகவந்தகர்மந் தீரவேண்டிக்
குணமாகத்தானதர்மஞ் செய்யவேண்டும்- தேனுகதருமங்கள்செ
ய்யாவிட்டால்தேகமதுநோயிட்டப்பாண்டமாமே. (நூறுக)

மருந்தீடுமுறிய.

ஆமேநீமருந்தீடுமுறியவேண்டில்அப்பனேஇலவினுடபட்டை
க்கொண்டு-தாமேநீயெலுமிச்சங் காயின்சோடுதயவாகஅரைத்து
க்காடியிற்கலக்கி-வாமேநீதுட்டெடைதான்சர்க்கரையுங்கூட்டி வ
ளமாகக்கொடுத்தவுடன்மயக்கந்தீரும்- போமேநீபெண்மயக்கம்
ஆண்மயக்கம்போச்சேநீமூன்றுநாள்கொடுத்தபோதே (நூறுச)

சூலைக்கு.

போதேநீசுங்கம்வேரிழைத்தரைத்துப்பொங்கமுடன் புன்னைக்
காய்வீதமாக-சூதேநீயில்லையடாகாடியிற்கொள்சுருக்கானமண்ட
லத்திவியாதியெல்லாம் - ஊதேநீயோடிவிடும்நாடுவிட்டு உத்தம
னேபத்தியந்தானில்லையப்பா-சாதேநீவெள்ளாட்டமூரி றன்னிற்
கொள்ளசார்வாகசூலையது தீருந்தானே (நூறுடு)

கர்பபமுண்டாக-எணணெய்.

தானேதானின்னமொன்றுசொல்லக்கேளுதயவானவீழியிலைச்
சாறுநாழி-மானேதான்தைவேளைச்சாறுநாழி மைந்தனேபிரிமியி
லைச்சாறுநாழி-கோனேதான்* கொட்டையிலைச்சாறுநாழி கொடி
தானநிலவாகைச்சாறுநாழி,தேனேதாணுவின்பால்படிதாணுழிதெ
ளிவாகசரக்குவகை சொல்லக்கேளே. (நூறுசூ)

* கொட்டையிலைகொட்டைக்கரந்தை.

கேளேநீமஞ்சளுடன்கடுகுகூடக்கெணிதமுடனிந்துபபுவெண்
காரந்தான், நாளேநீகடுக்காயும்வெள்ளைபபூண்டுநலமானஆண்வச
ம்புசுக்குங்கூடப, பாளேநீவகைவகைக்குவிராகன்மூன்றுபண்பா
கபபொடிசெய்துஇதினிற்போட்டு, கோளேநீவிளக்கெண்ணெய்
நாழிவிட்டுக் கொடிதாகமெழுகுபதந்தன்னில்வாங்கே (நூறுஎ)

வாங்கியேகணபதிக்குமுன்னேவைத்து வகையாகசோடசங்கள்
செய்தபின்பு, பாங்குடனேமாதவிடைமூன்றும்நாள்தான் பண்ண
பாகத்தலேமூழுகிக்கரண்டியெண்ணெய், தாங்கியேகொடுத்துவிடு
நாள்மூன்றபபாதயவாகமறுபத்தியமொருநாட்காரு, தூங்கியேதி
ரியாதேஐந்தாநாளில் துருசாகசிரசுக்குநீரைவாரே. (நூறுஅ)

வாரோநீவறுத்தவுப்பு பொறிச்சாரப்பா வளமாகமற்றுநாளெல்
லாஞ்சேரு-தீரோநீமற்றுநாள்நசியமொன்று தீர்க்கமாய்வேலியிலே
வேரைத்தட்டி - கூரோநீவலதுநாசியிற்பிழிந்தால் கொற்றவனேஆ
ண்பிள்ளைப்பிறக்கும்பாரு- சீரோநீயிடதுநாசியிற்பிழிந்தால் சிறப்
பானப்பெண்ணென்றுஞ்செப்பிலேமே. (ஞருக)

துவளை.

செப்பிலேந்துவளையொன்றுசொல்லக்கேளு சிறப்பானமாவி
லைமாதளையுஞ்சேர்த்து-வப்பிலேங்கஸ்தூரிமஞ்சளோடுதாயகமா
யிலைமூன்றுஞ்சமனாய்ச்சேர்த்து - அப்பிலேஞ்சலம்விட்டுஅரை
த்துமைபோல் அடவாகமேனியெங்கும்பூசச்சொல்லு - வெப்பி
லேமேலேக்கி யுதிர்த்துபோட்டு விதமாக வுதிர்ந்ததை தான்
சேரவாரே (ஞசுய)

புகை.

வாரிஞதைமாவிலையின்தன்னில்வைத்து வகையாக மூடகங்காட்
டித்தலையைச்சுற்றி-கோரினேனடுவாசல்குழியைத்தோண்டி குண
மாகத்தான்புதைத்துச் சொல்லக்கேளு-ஆரினென்சலமதுதான் சி
ரசில்வார்த்துஅப்பனேபுகையொன்றுசொல்வேன்பாரு-தூரினே
ன்சாம்பிராணி அகிலின்கட்டைத் தூளிடித்துப்புகைகாட்டு நாள்
தான்மூன்றே (ஞசுக)

மூன்றுநாள்துவலையிட்டுப் புகையும்போட்டுமூர்க்கமுள்ளசித
ம்பரத்தைமாறிக்கட்டு-ஈன்றுபோல்மூன்றுதிங்களிந்தபாவம் இத
மானமாதவிடாயாகும்பக்குவம்-கூன்றுபோலிம்முறையைச் செ
ய்யும்போது குணமாகசர்ப்பமது தரிக்கும்பாரு-ஊன்றுபோல்
போகருடகடாக்ஷத்தாலே உத்தமனேபுலிப்பாணி பாடினேனே

சிவகிரி வளப்பம்.

பாடினேன் சிவகிரியின் மாற்றேதென்னில் பண்பாக ஆயிரத்
தெட்டுமாற்று-சூடினேனவலோகமிதிலேயுண்டு சுருக்கப்பாசாஸ்
திரமும் வேதையோடும் - வாடியேதிரியாதே நாயும்மாறும் வ
யதப்பாலக்கில்லை கெவுனியாவாய் - நாடியேசுன்னமொடு சித்தா
ரக்காடுநாயகனே அவ்விடசித்திநடனந்தானே (ஞசுஙு)

தானென்ற நவசித்தர் கோடாகோடி தாநடநமதிகமடாசித்த
ர் கூட்டங்-கோனென்றமலையுள்ளே விருக்ஷமூலி குற்றமில்லைவே
தையுந்தானநேகஞ்செய்வார் - வானென்றதேவரொடு முனிவர்சி
த்தர் வருகிறதும்போகிறதுங்காணச்செய்யு-மானென்றதேவரொ
டுதவமேசெய்தோர்மைந்தனேசித்திமுத்திபெறுவர்தானே.ஞசுச

வராககிரி.

தானென்றவராககிரிச்சருவில்மைந்தா தயவானவோடைகளும்
ஆறுதோறுந்-தேனென்றஅருவியுடமண்ணுங்கல்லுந் தெரியாமல்
தங்கமாயிருக்குமப்பா-பானென்றமூலிகையால் வேதையாகும்ப
ட்டமண்ணுங்கல்முதலாய்த்தங்கமாகுங்-கோனென்றசிலபோலே
கிடக்கும்பாரு கொற்றவனேயறியார்களாருந்தானே. (ஈசுஞ)

சதுரகிரி.

தானுனசதுரகிரி மேலேயப்பா தயவான*உதகமொன்று இரு
க்குதப்பா,மானுனக்*காஞ்சனமாங்காயசித்தி மைந்தனே அஷ்ட
சித்தி கெவுனசித்தி கோனுனதேவர்முதல் கணங்கள்யாவுங் கூப்பி
ட்டால் கேள்விவந்து கேட்கும்பாரு,வானுனசித்தருடகூட்டமெ
த்த வளமானசஞ்சீவிமூலியுண்டே (ஈசுசு)

* உதகம் - சலம்,

* காஞ்சனம்-பொன்,

உண்டானமூலியைத்தான் குகையினுள்ளே ஒளித்துவைத்தார்
சித்தசெல்லாம் வெளியாமென்று- பண்டானசித்தருக்கு மூலிகிட்
டும் பாவிகட்குங்காமிகட்குங் கிட்டுமோசொல்-சண்டான பூவுல
கில் மனுடசெல்லாஞ் செத்தவர்க ளெழுந்திருப்பார் திடங்கொ
ள்ளாது-கொண்டானவிதியாளிவந்தாலுகில் கூப்பிட்டுத்தான்கொ
டுப்பார்சித்தர்தானே (ஈசுள)

இருமலுக்குலேகியம்.

தானுனலேகியந்தான் சொல்லக்கேளு தருவான * கரிப்பான்
சாற்படிதானொன்று-பானுனகாணிச்சாற்நாழியொன்று பண்பாக
சங்கம்பழச்சாறுநாழி - வானுனதேன்படிதானையுங்கூட்டி வள
மான ஆவினெய்ப்படிக்கால்சேர்த்து - கோனுனதிப்பிலியு மிள
குசுக்குகொடிதானசிற்றரத்தை கடுக்காய்த்தானே (ஈசுஅ)

* கரிப்பான்சாற் - கையாந்தகரை.

தானப்பாவவைக்குவகைவிராகனேந்து தான்பொரித்து வடிக்க
ட்டிலேகியமாய்க்கிண்டு-வானப்பாநெல்லிக்காயளவாய்க்கொள்ள
வளமாகஈராறுநாளுக்குள்ளே - கோனபபா அந்திசந்திகொண்ட
போது கொடிதான இருமலெல்லாங்குடியேபோகும் - நானப
பாபத்தியந்தா னில்லையையா நாயகனே லேகியத்தான்மேருவெ
ன்னே ஈசுஙூ

சூலவாயுமேகத்துக்குத்தயிலம்.

என்னவே தயிலமொன்றுசொல்லக்கேளு இதமானகொடிவே
லிமூலிதானும் - பன்னவேதுலாமனைதா னிடித்துபோட்டு ப

ண்பர்ன ஆவின்பட்டை சங்கம்வேரும் - நன்னவேவகைக்குவகை
துலாமேகால்தான்நாயகனேஇத்துடனேகூடச்சேர்த்து- அன்ன
வேதூணி நீர்விட்டுக்காச்சு அப்பனேயெட்டொன்றுய் குறுக்கி
வாங்கே (ாஎ)

வாங்கியே எள்ளெண்ணெய் நாழிவாரு வகையானமிளகுபல
மாைத்துப்போட்டு- தாங்கியே பசுவின் வெண்ணெய் பலந்தா
னொன்று தயவாகவேப்பெண்ணெய் படிக்கால்வாரு- பாங்கியே
மெழுகுபதந்தனில் வழித்து பண்பாகமுழுகிவர சூலையகுந்-
தூங்கியேதிரியாதே மேகமெல்லாந் துடித்துவிழுந் தேயோடி
மெதிர்நில்லாதே (ாஎக

பிரமேகத்துக்கு எண்ணெய்.

நில்லாதபிரமேகந்தீரவேண்டில் நிஷயமாய்த் தேங்காய்ப்பா
ல்படிதானொன்று- வல்லானபொடிதலைச்சாற் படிதானொன்று வ
ளமானப்பிரமிசாற் படிதானொன்று, நல்லாகளரித்திருத்து எண்
ணெய்வாங்கிநாயகனேமூன்றுநாளாறுவேளை - சொல்லாகக்குடி
த்தவுடன்பிரமியங்கள்சிறப்பாகத்தீருமடா திண்ணந்தானே ()

திண்ணமாய்ப்பத்தியந்தானுறுநாளுஞ் சிறப்பான ஆவின்பா
லாகுமல்லால் - வண்ணமாய்மற்றொன்று மாகாதப்பா வளமாகவ
ஞாநாள் தலையைமூழ்கு, உண்ணமாஞ் சீப்பிரமியம் ரத்தப்பிர
